தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

26.06.2013 A.M

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி

பண்ருட்டி நகராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி பள்ளி மாணவர்களை கொண்டு செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

நகராட்சி அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட பேரணியில் பண்ருட்டி நகரில் உள்ள பள்ளிகளில் பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இவர்கள் பதாகைகளை ஏந்தி மழைநீர் சேகரிப்பு குறித்த வாசகங்களை முழங்கியவாறு முக்கிய சாலை வழியாக சென்று மீண்டும் நகராட்சி அலுவலகத்தை அடைந்தனர். விழிப்புணர்வுப் பேரணியை நகர்மன்றத் தலைவர் பி.பன்னீர்செல்வம் கொடியசைத்து தொடங்கி வைத்தார். துணைத் தலைவர் மல்லிகா, கவுன்சிலர்கள், நகராட்சி ஊழியர்கள், வியாபார சங்க மற்றும் நகர முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வேளாண்மை விரிவாக்க மையங்களில் 513 மெ.டன் நெல் விதைகள் இருப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் 513 மெட்ரிக் டன் நெல் விதைகள் இருப்பில் உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் வேளாண்மை இணை இயக்குநர் செப்ந்தரராஜன் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த மே 31-ம் தேதி வரை சராசரியாக 85.20 மி.மீ. மழை பெய்துள்ளது. நடப்பு மாதத்தில் 42.10 மி.மீ. மழை பெய்துள்ளது. 2013 -14-ஆம் ஆண்டில் நெல்பயிர் சொர்ணாவாரி பருவத்தில் 18,400 ஹெக்டேரில் சாகுபடி செய்ய திட்டமிட்டு 4,130 சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்போது 698 ஹெக்டேரில் நடப்பு செய்யப்பட்டுள்ளது.

சிறுதானியத்தில் 3,300 ஹெக்டேரிலும், பயிர் வகைகளில் 9,790 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துகள் 28,430 ஹெக்டேரிலும், கரும்பு விதைகளில் 2,100 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களில் 513 மெட்ரிக் டன் நெல் விதைகளும், பயிர் வகைகளில் 25.25 மெட்ரிக் டன்னும், எண்ணெய் வித்து பயிர் விதைகளில் 23.41 மெட்ரிக் டன் விதைகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் 3,140 மெட்ரிக் டன் உரங்கள்

இருப்பு வைக்கப்பட்டுள்ளன. நடப்பு பருவத்துக்கு தேவையான உரங்கள் வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும், தனியார் உர விற்பனை நிலையங்களிலும் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேளாண் விரிவாக்க மையங்களில் 1,03,440 மூட்டை உயிர் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 1,942 ஏரிகளில் 50 சதவீதத்துக்கும் குறைவாகவே தண்ணீர் உள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான பண்ணைத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம், திருந்திய நெல் சாகுபடி, அதிதீவிர பயிர் சாகுபடி திட்டம், நீடித்த கரும்பு சாகுபடி, தேசிய வேளாண் காப்பீடு திட்டம், தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டம், விதை கிராம திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. எனவே, இந்த திட்டங்களை பயன்படுத்தி கொள்ளும்படி விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பால் பண்ணைகள் அமைக்க மானியத்தில் கால்நடைகள்

புதுச்சேரியில் ஆதிதிராவிட இளைஞர்கள் பால் பண்ணைகள் அமைக்க, மானிய விலையில் கால்நடைகள் வழங்கப்பட்டன.

புதுச்சேரி அரசின் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் பயின்று, வேலையில்லாமல் இருக்கும் ஆதிதிராவிட இளைஞர்களுக்கு, தலா 5 பசுக்களைக் கொண்டு சிறு பால் பண்ணைகள் அமைக்க 75 விழுக்காடு மானியத்தில் கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், பாகூர் தொகுதியைச் சேர்ந்த 10 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, முதல் தவணையாக நபருக்கு 3 மாடுகள் வீதம் மொத்தம் ரூ.4.5 லட்சம் மதிப்பில் 30 மாடுகள் வழங்கப்பட்டன.இதற்கான நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் தியாகராஜன், இந்த மாடுகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் பத்மநாபன், மருத்துவர் ராணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ரூ.1 கோடி வரை தொழில் தொடங்க மானியத்துடன் கடனுதவி

சிவகங்கை மாவட்டத்தில் ரூ.1 கோடி வரை தொழில் தொடங்க 25 சதவீத மானியத்துடன் கடனுதவி வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் சார்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதைத் தொடக்கி வைத்து ஆட்சியர் பேசியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளாகப் பெருநகரங்களை இணைக்கும் சாலைகள், மாவட்டத்திற்கு அருகே விமான நிலையம், துறைமுகம் அமைந்துள்ளது.

இம்மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்படாத தொழில்களைத் தொடங்க நாம் தயாராக வேண்டும். உணவு பதப்படுத்துதல், பதனிடப்பட்ட தோல் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை இங்கு தொடங்கலாம்.

உலக மயமாக்கலால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை சந்தைப்படுத்துவது தற்போது எளிமையாகிவிட்டது. எனவே பல்வேறு தொழில்களை உள்ளடக்கி கிளஸ்டர்கள் அமைக்க வேண்டும். சிட்கோ பகுதியில் கையகப்படுத்தப்பட்ட இடங்களில் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை தொடங்கலாம்.

புதுவாழ்வுத் திட்டம், மகளிர் திட்டம் ஆகியவற்றின் மூலம் திறன் வளர்ப்புப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தின் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கும் வகையில் முதல் தலைமுறையைச் சேர்ந்த புதிய தொழில்முனைவோர் முன்வர வேண்டும் என்றார் ஆட்சியர்.

கருத்தரங்கிற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் காரைக்குடி மண்டல முதன்மை மேலாளர் பி. மாதவன் முன்னிலை வகித்துப் பேசினார். நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் பங்காரு கிரி கருத்துரையாற்றினார்.

சிவகங்கை மாவட்ட சிறு தொழில்கள் சங்கத் தலைவர் கரு. ராஜமாணிக்கம், நகர்மன்றத் தலைவர் எம். அர்ச்சுனன், மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் த. மாயத்தேவர் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

முன்னதாக மாவட்ட தொழில் மைய மேலாளர் (பொருள்கள்) சி. கணேசன் வரவேற்றார். தொழில் மைய மேலாளர் (பொருளாதாரப் புலனாய்வு) வி. ஆதிமூலம் நன்றி கூறினார்.

## வாழை இலை விலை வீழ்ச்சி

வாழை இலை விலை வீழ்ச்சி அடைந்து வருவதைத் தொடர்ந்து விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

வாழை இலையில் உணவு உண்பது உடலுக்கு சிறந்தது. இதனால் விருந்து மற்றும் விசேஷ நாள்களில் வாழை இலை பயன்படுத்தப்படுகிறது. வாழைப் பயிரில் வாழைக்காய், பூ, தண்டு என அனைத்தும் உணவாகப் பயன்படுத்தப்படுகிறது.

முகூர்த்த நாள்களில் வாழை இலைக்கு மிகுந்த கிராக்கி ஏற்படுவதால் அப்போது விலை கடுமையாக ஏற்றம் காணும். ஒரு கட்டு என்பது 200 இலைகளைக் கொண்டிருக்கும். முகூர்த்த காலங்களில் இவற்றின் விலை ரூ.900 முதல் 1000 வரை விற்கப்படும்.

ஒரு கட்டு இலையை அறுக்க அறுவை கூலியாக ரூ.60, அவற்றை வண்டியில் ஏற்றுவதற்கு கூலியாக ரூ.20, கமிஷன் கடை சீட்டுக்கு ரூ.10 என விவசாயிகள் வழங்கி வருகின்றனர்.

இலை வியாபாரம் குறித்து மேலூர் அம்பலக்காரன்பட்டியைச் சேர்ந்த வாழை விவசாயி சொ. கண்ணன் கூறியதாவது:

ஆனி மாதம் முகூர்த்தங்கள் குறைவாக உள்ளது. இதனால் வாழை இலைக்கான கிராக்கி இல்லாததால் விலை குறைந்து தற்போது ஒரு கட்டு இலை ரூ.100 முதல் 120 வரை விலை போகிறது.

இதன் காரணமாக ஒரு கட்டுக்கு ரூ.10 முதல் 30 மட்டுமே விவசாயிக்கு கிடைக்கிறது. வாழை இலையை 3 நாள்களுக்கு மேல் வைத்திருக்க முடியாது என்பதால் அதை உடனே விற்றுவிட வேண்டியுள்ளது.

அழுகும் பொருள்களின் வரிசையில் வாழை இலையும் இருப்பதால் கிடைக்கும் விலைக்கு அவற்றை விற்கும் சூழலில் விவசாயிகள் உள்ளனர். தற்போது விலை குறைந்து வருவதால் வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள் வேதனையில் உள்ளனர் என்றார்.

### சிவகாசியில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

வறட்சி நிவாரணம் முறையாக வழங்கக்கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிவகாசி வட்டக்கிளை சார்பில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகாசி வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அந்த அமைப்பின் வட்டச் செயலாளர் கூ.கூடலிங்கம் தலைமை வகித்தார். சாணார்பட்டி எஸ். உலகநாதன், செங்கமல நாச்சியார்புரம் கே.சுந்தரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சி.பி.ஐ. மாநிலக்குழு உறுப்பினர் க.சமுத்திரம் ஆர்ப்பாட்டத்தை தொடக்கிவைத்தார். நகரச் செயலாளர் ஆர்.ஜீவா போராட்டத்தை முடித்து வைத்தார். பின்னர் கோரிக்கை குறித்து வட்டாட்சியர் மைக்கேல்ராஜுவிடம் மனு அளிக்கப்பட்டது.

### லோயர் நீராறில் 244 மி.மீ. மழை

லோயர் நீராறு அணைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 244 மி.மீ. மழை பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): சோலையாறு 200, பரம்பிக்குளம் 97, ஆழியாறு 15.4, திருமூர்த்தி 6, அமராவதி 1, அப்பர் நீராறு 156, வேட்டைக்காரன்புதூர் 26.2, மாக்கினாம்பட்டி 22.8, மணக்கடவு 26, நல்லூர் 4, நவமலை 9, சர்க்கார்பதி 47, தூணக்கடவு 76, பெருவாரிப்பள்ளம் 80, அப்பர் ஆழியாறு 10, பீளமேடு விமான நிலையம் 5.7, பெரியநாயக்கன்பாளையம் 2, வேளாண் பல்கலைக் கழகம் 13.4, சின்கோனா 199, கோவை தெற்கு 11.

## ஒரே நாளில் அமராவதி அணை நீர்மட்டம் 7 அடி உயர்வு

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் கனமழையின் காரணமாக அமராவதி அணையின் நீர் மட்டம் ஒரே நாளில் 7 அடி உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உடுமலை அமராவதி அணையின் மொத்த உயரம் 90 அடி. திருப்பூர், ஈரோடு, கரூர் என 3 மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள் இந்த அணையை நம்பியே உள்ளன. மேலும் நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு இந்த அணை குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது.

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஓராண்டுக்கு மேலாக மழை முற்றிலும் பொய்த்துப் போனது. இதனால் அணையில் போதுமான தண்ணீர் இல்லை. கோடை காலத்தில் அணையின் நீர் மட்டம் மிகவும் கீழ் சென்றதால், குடிநீர் பிரச்னை ஏற்பட்டது. இருப்பினும், இருப்பு இருந்த நீர் குடிநீர் தேவைகளுக்காக மே மாதத்தில் ஒரு முறையும், ஜூனில் தொடக்கத்தில் ஒரு முறையும் என அணை இரண்டு முறை திறந்து விடப்பட்டது.

இந் நிலையில், அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சில நாள்களாக பெய்து வரும் தென்மேற்கு பருவ மழையால் அணையின் நீர் மட்டம் மளமளவென உயர்ந்து வருகிறது. இதைத் தொடர்ந்து, கரூர் வரையிலான கரையோர கிராமங்களின் குடிநீர் தேவைக்காக 7 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால் தொடர்ந்து மழை பெய்து வந்ததால், நீர் இருப்பு நல்ல நிலையில் நீடித்து வந்தது. செவ்வாய்க்கிழமை காலை 7 மணி அளவில் அணைக்கு அதிகபட்சமாக 4172 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதைத் தொடர்ந்து அணையின் நீர்மட்டம் 43.72 அடியாக உயர்ந்தது.

இதுகுறித்து பொதுப் பணித்துறையினர் செவ்வாய்க்கிழமை கூறியது:

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. தாராபுரம் வரையிலான பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இது வினாடிக்கு 1000 ஆயிரம் கன அடி வீதம் 4 நாள்களுக்கு இந்தத் தண்ணீர் திறப்பு இருக்கும். புதிய

ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு புதிய வாய்க்காலில் (ஏஎம்சி) புதன்கிழமை காலை தண்ணீர் திறந்து விட வாய்ப்புள்ளது என்றனர்.

அணை நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் செவ்வாய்க்கிழமை காலை 7 மணி நிலவரப்படி 43.08 அடி நீர் மட்டம் இருந்தது. அணைக்கு உள்வரத்தாக 4 ஆயிரத்து 172 கன அடி வந்து கொண்டிருந்தது. 4032 மில்லியன் கனஅடி கொண்ட அணையில் 859.65 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. அணையில் இருந்து 1010 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது

## பருத்தி ஏல விற்பனை இன்று தொடக்கம்

பவானியை அடுத்த பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டத்தில் பருத்தி ஏல விற்பனை புதன்கிழமை (ஜூன் 26) தொடங்கி வாரந்தோறும் நடைபெற உள்ளது.

இதுகுறித்து விற்பனைக் கூடத்தின் கண்காணிப்பாளர் அந்தோணி ஜோசப் லூர்துராஜ் வெளியிட்ட செய்தி: பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் புதன்கிழமைகளில் நடக்கும் பருத்தி ஏல விற்பனையில் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் பெருமளவில் கலந்து கொள்கின்றனர்.

மேலும், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பஞ்சாலைகள், நூற்பாலைகள் நேரடியாக கலந்துகொண்டு கொள்முதல் செய்கின்றன. விவசாயிகள் தங்களின் பருத்திக்கு நல்ல விலை கிடைக்க நன்கு முதிர்ந்து வெடித்த பருத்தியினை அதிகாலை நேரத்தில் பறித்து, நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர் தூசுகள் நீக்கி, ரகம் வாரியாகப் பிரித்து விற்பனைக்கு கொண்டு வர வேண்டும்.

இதன்மூலமாக பருத்திக்கு சரியான எடை, உரிய விலை கிடைப்பதோடு விற்பனை செய்யப்பட்ட பருத்திக்கு பணப் பட்டுவாடா உடனடியாக செய்யப்படும் என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 50.43 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 50.43 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 4,369 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.35 டி.எம்.சி.

## நீர்பிடிப்புப் பகுதிகளில் தொடரும் மழை

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிக்கு உள்பட்ட நீர்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழையால், குந்தா பகுதி அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதுடன், பலத்த காற்றும் வீசுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. விடிய, விடிய மழையுடன் காற்றும் வீசுவதால் கடும் குளிர் நிலவுகிறது. வெம்மை ஆடைகளை அணிந்தும் குளிரின் தாக்கம் குறையாததால், பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர்.

குறிப்பாக தேயிலைத் தோட்டம், மலைக் காய்கறி தோட்டங்களுக்கு வேலைக்குச் செல்ல தொழிலாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் கூட்டுறவுத் தேயிலை ஆலைகளுக்கு பசுந்தேயிலை வரத்து கணிசமாக குறைந்துள்ளது.

கேரளத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், இம்மாநிலத்தையொட்டி அமைந்துள்ள வெஸ்டர்ன் கேட்ச்மெண்ட் நீர்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், நீராதாரங்களில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு, குந்தா, கெத்தை உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இந்நிலையில் குந்தா பகுதியில் செவ்வாய்க்கிழமை பதிவான மழை அளவு (மி.மீ.) விவரம்: அவலாஞ்சி-251, அப்பர்பவானி-70, எமரால்டு-57, குந்தா-12, கெத்தை-10, கிண்ணக்கொரை-2.

## விவசாய நிலங்களுக்குப் பாதை: வருவாய்த் துறை நடவடிக்கை

பேர்ணாம்பட்டு அருகே வருவாய்த் துறையினர் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு ஆற்றோரம் ஆக்கிரமிப்புகளை அகற்றி விவசாயிகளின் நிலங்களுக்குச் செல்ல பாதை அமைத்துத் தந்தனர்.

பேர்ணாம்பட்டு ஒன்றியம், மசிகம் ஊராட்சிக்குள்பட்டது சேராங்கல் கிராமம்.

இக்கிராமத்தைச் சேர்ந்த 79 விவசாயிகளுக்குச் சொந்தமான 149 ஏக்கர் நிலம் இங்குள்ள ஆற்றங்கரையோரம் உள்ளது.

இந்த நிலங்களுக்குச் செல்ல பாதை வசதி கோரி விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் பொ. சங்கரிடம் கோரிக்கை மனு அளித்தனர். ஆட்சியர் உத்தரவின்பேரில் குடியாத்தம் வட்டாட்சியர் எம். கஜேந்திரன், துணை வட்டாட்சியர் சரவணன், தலைமையிடத்து

சர்வேயர் ரவீந்திரன், வருவாய் ஆய்வாளர் அம்ருன்னிசா உள்ளிட்டோர் செவ்வாய்க்கிழமை அங்கு சென்று ஆற்றோர புறம்போக்கு நிலத்தை அளவீடு செய்தனர்.

இதையடுத்து வருவாய்த் துறையினர் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றி, சுமார் 3.5 கி.மீ. நீளம், 20 அடி அகலத்தில் புதிதாக பாதை அமைத்துத் தந்தனர்.

**லேசான மழையுடன் அதிகக் காற்று வீசக்கூடும்**

கேரளத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், நாமக்கல் மாவட்டத்தில் லேசான மழையும், அதிகக் காற்றும் வீசக்கூடும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (ஜூன் 26 முதல் ஜூன் 28 வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் சில இடங்களில் 3 மிமீ முதல் 4 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

காற்றின் திசைவேகம் மணிக்கு 6 கிமீ முதல் 7 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 38 சதம் முதல் அதிகபட்சம் 75 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு...: கேரளாவில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், நாமக்கல் மாவட்டத்தில் லேசான மழையும், அதிக காற்றும் கொண்ட வானிலை நிலவும். இதனால் கோழிப் பண்ணைகளில் தீவனம் விரயமாவதைத் தடுக்க பக்கவாட்டில் படுதாவைக் கட்டி வைப்பதன் மூலம், தீவனச் செலவை குறைக்கலாம். தீவன எடுப்பு உயர்வதைத் தடுக்க தீவனத்தில் அதிக எரிசக்தி (2,550 கிலோ கலோரி - கிலோ வரை) கொடுக்க வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு...: தற்போது காய்கறி நாற்றுக்கள் உற்பத்தி செய்யும் பருவம் என்பதால் விதைப்புச் செய்வதற்கு முன்பு, காய்கறி விதைகளை (விதையளவு - ஏக்கருக்கு தக்காளி 160 கிராம், மிளகாய் 120 கிராம்) ஒரு கிராம் டிரைகோடெர்மாவிரிடி மற்றும் ஒரு கிராம் சூடோமோனாஸ் ஃப்புளூரசீன் ஆகியவற்றுடன் கலந்து 20 நிமிஷம் கழித்து நாற்றங்காலில் விதைப்பு செய்திட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விற்பனை அதிகரிக்க வாய்ப்பு

வட மாநிலங்களில் ஷிரவன பண்டிகை கொண்டாடப்பட உள்ளதால், ஒரு மாதத்துக்கு முட்டை விற்பனை அதிகரிக்கக் கூடும் என, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கணித்துள்ளது.

வட மாநிலங்களில் கடைப்பிடிக்கப்பட்ட ஆசாட விரதம் நிறைவுற்று, மே மாதம் இறுதியிலிருந்து முட்டை நுகர்வு அதிகரிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக, முட்டை பண்ணைக் கொள்முதல் விலையிலும் உயர்வு ஏற்பட்டு, கடந்த மே மாதம் இறுதியில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை ரூ. 2.80 ஆக உயர்ந்தது. இந்த விலை படிப்படியாக உயர்ந்து, ஜூன் 24ஆம் தேதி ரூ.3.78ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இதே நிலையில் நீடிக்கும் முட்டை விலை, சந்தை நிலவரங்கள் சாதகமாக உள்ளதால், மேலும் உயர வாய்ப்புள்ளதாக நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே, வட மாநிலங்களில் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான ஷிரவன பண்டிகை விரதம் உத்தரபிரதேசம், பிகார், மேற்கு வங்கம், பஞ்சாப் மாநிலங்களில் வருகிற ஜூலை 22ஆம் தேதி முதல் கடைப்பிடிக்கப்பட உள்ளது. அதேபோல, ஆந்திரம், கர்நாடகம், மஹாராஷ்டிரம் மாநிலங்களில் இந்தப் பண்டிகை விரதம் ஆகஸ்ட் 7ஆம் தேதி முதல் கடைப்பிடிக்கப்பட உள்ளது.

இதன் காரணமாக விரதத்துக்கு முந்தைய ஒரு மாத காலம் எப்போதும் முட்டை விற்பனை அதிகமாக இருக்கும் என்பதால், அடுத்த ஒரு மாதத்துக்கு முட்டை விற்பனை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், முட்டை விலையும் அதிகரிக்கக்கூடும் என்று அந்தக் குழு தெரிவித்துள்ளது.

பிற மண்டலங்களில் விலை நிலவரம்: சென்னை -ரூ.3.85, பெங்களூர் -ரூ.3.70, மைசூர் -ரூ.3.73, ஹைதராபாத் -ரூ.3.42, மும்பை -ரூ.3.80, விஜயவாடா -ரூ.3.33, கொல்கத்தா -ரூ.3.65, பர்வாலா -ரூ.3.20, தில்லி -ரூ.3.36.

## பட்டு விவசாயிகளுக்கு இளம்புழு வளர்ப்பு விளக்கக் கூட்டம்

பர்கூர் அருகே பட்டு வளர்ச்சித் துறை சார்பில், இளம்புழு வளர்ப்பு முறை குறித்த விளக்கக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

பர்கூர் அருகேயுள்ள மேல்கொட்டாய் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் பட்டு விவசாயிகளுக்கு இளம்புழு வளர்ப்பு முறை, அதன் பயன்கள் குறித்த விளக்கக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

பர்கூர் தொழில்நுட்ப சேவை மையப் பட்டு வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் சேகர், பட்டு விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சித் துறை மூலம் வழங்கப்படும் மானியம், வெண்பட்டு முட்டை வளர்ப்பில் வருமானம் குறித்து விளக்கினார். மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி டாக்டர் பாலசரஸ்வதி, இளம்புழு வளர்ப்பு முறைகள், அதன் பயன்கள் குறித்து விளக்கினார்.

மேலும், விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார். இந்தக் கூட்டத்தில், 25 பட்டு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அட்மா பட்டு வளர்ச்சித் துறை சார்பில், மத்திய பட்டு வாரிய இளம்புழு வளர்ப்பு மையத்தில் இளம்புழு வளர்ப்பு முறைகள், கையாளும் தொழில்நுட்பங்கள் குறித்து நேரடியாக விளக்கப்பட்டது. விவசாயிகளுக்கு இளம்பட்டு புழுக்கள் விநியோகிக்கப்பட்டன.

இளநிலை ஆய்வாளர் கிருஷ்ணன் நன்றி கூறினார்.

**"குறுவை சிறப்புத் தொகுப்பு பயனாளிகளை ஒரு வாரத்துக்குள் தேர்வு செய்ய வேண்டும்**

குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்துக்கான பயனாளிகள் தேர்வை ஒரு வாரத்துக்குள் முடிக்க வேண்டும் என்றார் வேளாண் உற்பத்தி ஆணையரும், முதன்மைச் செயலருமான சந்தீப் சக்சேனா.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை இரவு நடைபெற்ற தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், திருச்சி ஆகிய டெல்டா மாவட்டங்களுக்கான குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது: தமிழக அரசின் குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேளாண் துறையோடு மற்ற துறைகளின் அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ஐந்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர்களும் விவசாய இடுபொருட்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மின்சாரத் துறை அலுவலர்கள் மின்சாரப் பகிர்வு சரியான முறையில் அளிக்க வேண்டும். மின்மாற்றிகள் பழுது ஏற்பட்டால், அதை உடனடியாகப் போர்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டும்.

குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 100 % மான்ய விலையில் உயிர் உரங்கள், நெல் நுண்ணூட்டம், உயிர் பூச்சி கொல்லிகள், ஜிப்சம் ஆகியன வழங்கப்படவுள்ளன. நீர் இழப்பைக் குறைக்கும் வகையில் ரூ.20,000

மதிப்புள்ள 180 மீட்டர் நீளம், 90 மி.மீ. விட்டம் கொண்ட எச்.டி.பி.இ. பைப்புகள் விலையில்லாமல் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தை முறையாக உரிய பயனாளிகளுக்கு அலுவலர்கள் கொண்டு சேர்க்க வேண்டும்.

குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்துக்கான பயனாளிகள் தேர்வை ஒரு வாரத்துக்குள் முடிக்க வேண்டும்.

விவசாய நடவு இயந்திரங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வங்கிகள் குறுவை சாகுபடிக்குத் தேவையான பயிர் கடனை உடனடியாக வழங்க வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் நகைக் கடன்களை அளிக்க வேண்டும். குறுவை சாகுபடி பரப்புகளைக் கிராம நிர்வாக அலுவலர்கள் தங்களுடைய அடங்கலில் விடுபாடின்றி பதிவு செய்ய வேண்டும் என்றார் சக்சேனா.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 15.44 அடியாக இருந்தது

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 15.44 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 89 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 598 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## கால்நடை வளர்ப்பில் தொழில்நுட்பங்களைக் கையாள வேண்டும்

கால்நடை வளர்ப்பில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும் என, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இரா. பிரபாகரன் கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் லாபகரமான ஆடு வளர்ப்புக்கான புதிய உற்பத்தி முறை மற்றும் நோய் மேலாண்மை அணுகுமுறைகள் குறித்த சர்வதேச கருத்தரங்கு திருநெல்வேலியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருநெல்வேலியில் மாவட்ட அறிவியல் மையத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கத் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்து இரா. பிரபாகரன் பேசியதாவது:

நாட்டில் ஒட்டுமொத்தமாக 127 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இதுபோல் மீன்கள் உற்பத்தியில் 2-ஆவது இடத்தில் இருக்கிறது. நாட்டில் 65 பில்லியன் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் 3-ஆவது இடம் கிடைத்திருக்கிறது. 3.4 மில்லியன்

டன் கறிக்கோழி உற்பத்தி மூலம் உலகளவில் 4-ஆவது இடத்தில் இந்தியா இருக்கிறது. ஆனால், உலகளவில் ஒப்பிடும்போது இந்தியாவில் ஒரு சதவிகிதம் அளவுக்கே இறைச்சி உற்பத்தி இருக்கிறது. இதில் பெருமளவு முன்னேற்றம் தேவைப்படுகிறது. இதற்காகவே பல்வேறு கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்துகின்றன.

கால்நடைப் பெருக்கத்துக்கு பல்வேறு புதிய அறிவியல் தொழில்நுட்பங்களை பல்வேறு நாடுகளில் விவசாயிகள் கையாண்டு பொருளாதாரத்தில் முன்னேறுகிறார்கள். ஆனால், இங்கு அத்தகைய தொழில்நுட்பங்களைக் கையாள விவசாயிகள் முன்வருவதில்லை. கால்நடைகளுக்கு உரிய சத்தான உணவுகளை அளிக்காமலும், உரிய தடுப்பூசிகளைப் போடாமலும் இருக்கிறார்கள். நீலநாக்கு நோய்க்கான தடுப்பூசிகளைப் போடுவதற்கு விவசாயிகள் முன்வருவதில்லை. இதனால் கால்நடைகள் இறப்பு உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படுகின்றன. அதுதொடர்பான விழிப்புணர்வு இல்லாமையும், பணப் பிரச்னைகளும் இதற்கு காரணமாக இருக்கின்றன.

கால்நடைகள் பெருக்கம், அவற்றை சந்தைப்படுத்துதல், அவற்றுக்கான நோய் மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் மாநில அரசு அதிக அக்கறை காட்டுகிறது. கால்நடைத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இருமடங்காக்கியிருக்கிறது. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரமாக கால்நடைகள் விளங்குவதால் அவர்களது பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு இலவசமாக ஆடு, கறவை மாடுகளை வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்துகிறது. பின்தங்கியுள்ள மண்டலங்களில் கோழி வளர்ப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. திருநெல்வேலியில் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரியில் கட்டமைப்புகளை உருவாக்க பல்கலைக்கழகம் பல்வேறு வகைகளிலும் உதவுகிறது என்றார் அவர்.

அமெரிக்கா வாஷிங்டன் மாகாண பல்கலைக்கழக சிகிச்சையியல் கல்வித் துறைப் பேராசிரியர் ராமநாதன் காசிமாணிக்கம் வாழ்த்துரை வழங்கினார். திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் எஸ். பிரதாபன் வரவேற்றார். கல்லூரியின் பயிற்றுவிக்கும் கால்நடை சிகிச்சை மைய பேராசிரியர் மற்றும் தலைவர் இரா. ராம்பிரபு நன்றி கூறினார்.

தொடர்ந்து ஆடுகள் உற்பத்தி, ஆடுகள் நலம் உள்ளிட்ட தலைப்புகளில் இரு அமர்வுகளாகக் கருத்தரங்கு நடைபெற்றது. ஆடுகள் உற்பத்தி அமர்வில் 63 ஆராய்ச்சிக்

கட்டுரைகளும், ஆடுகள் நலம் அமர்வில் 93 ஆராய்ச்சிக் கட்டுரைகளும், மேலும் 23 முதன்மைக் கட்டுரைகளும் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்தக் கட்டுரைகள் அடங்கிய புத்தகம் தொடக்க விழாவில் வெளியிடப்பட்டது. நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கால்நடை மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள், கால்நடை மருத்துவர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநரகம், அமெரிக்காவின் வாஷிங்டன் மாநில பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்தின.

## எருமைகளில் சினைப்பருவ ஒருங்கிணைப்பு முறையை அறிமுகம் செய்யத் திட்டம்

எருமைகளில் சினைப்பருவ ஒருங்கிணைப்பு முறையை அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், ஏற்கெனவே கறவை மாடுகளில் இது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் இரா. பிரபாகரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பல கறவை மாடுகள் ஒரே நேரத்தில் சினைப்பருவத்துக்குத் தயாராகும் வகையில் ஊசி மூலம் மருந்து செலுத்தப்படும் முறையை சினைப்பருவ ஒருங்கிணைப்பு முறை என்கிறோம். இத் திட்டத்தை எருமைகளிலும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது. ஓராண்டில் 25 ஆயிரம் எருமைகளில் இம்முறையை அமல் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள மொத்த பால் உற்பத்தியில் எருமைகளின் பங்கு 25 சதவிகிதமாகும். தமிழகத்தில் இது 12 சதவிகிதமாக இருக்கிறது.

சைப்ரஸ் ஆடுகளின் விந்தணுக்களை இறக்குமதி செய்து அவற்றின் மூலம் இங்குள்ள ஆடுகளை கருத்தரிப்பு செய்து அதிக லாபம் கொடுக்கும் வகையிலான கலப்பின ஆடுகளை உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

கால்நடைகளில் குறிப்பாக ஆடுகளுக்கு ஏற்படும் கழிச்சல் நோய்க்கு தடுப்பூசியைக் கண்டறிந்து பரிசோதனைக்கு உள்படுத்தியிருக்கிறோம். இந்த நோய் தாக்கிய ஆடுகளுக்கு இந்தத் தடுப்பூசி போடப்பட்டதில் 80 சதவீத பாக்டீரியா கிருமிகள் அழிக்கப்பட்டது பரிசோதனையில் தெரியவந்திருக்கிறது. இத்தடுப்பூசியை 6 மாதத்திலிருந்து ஓராண்டுக்குள் பயன்பாட்டுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் கால்நடை மருத்துவக் கல்லூரி கட்டுமானப் பணிகள் ரூ.54 கோடி செலவில் பல்வேறு கட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றன. மொத்தம் 18 துறைகள் ஏற்படுத்தப்படும். கட்டுமானப் பணிகள் 2015-ல் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கால்நடை மருத்துவ அறிவியல் பட்டப்படிப்புக்கு கடந்த ஆண்டில் 8900 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவ்வாண்டு 11 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருக்கிறார்கள். இம்மாதம் 4-ஆவது வாரத்தில் கலந்தாய்வு நடைபெறவுள்ளது. திருநெல்வேலி கல்லூரியில் 40 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றார் அவர்

## சேர்வலாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 12 அடி உயர்வு

பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடியும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 12 அடியும் உயர்ந்துள்ளது. கடனாநதி, ராமநதி அணைகள் நிரம்பியதையடுத்து அணைகளிலிருந்து 1500 கனஅடி உபரிநீர் ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் நீடித்துவரும் மழையால் அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 23 மி.மீ. மழையும், பாபநாசம் கீழ் அணையில் 1 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 20 மி.மீ. மழையும், ராமநதி அணையில் 2 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

பாபநாசம் அணைக்கு நொடிக்கு 6460.30 கனஅடி நீர்வரத்து இருந்தது. மாலை 5 மணி நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து 3,000 கனஅடியாக குறைந்து காணப்பட்டது. அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்ந்து 108 அடியாக இருந்தது. அணையிலிருந்து பாசனத்துக்காக 1154.75 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 12 அடி உயர்ந்து 131.72 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 1,000 கனஅடி இருந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.75 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 420 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து பாசனத்துக்காக 275 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால், கர்நாடக மாநிலம், கபினி அணை நிரம்பும் தருவாயில் உள்ளது. இதையடுத்து, அணையின் பாதுகாப்பு கருதி நொடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.**

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால், கர்நாடக மாநிலம், கபினி அணை நிரம்பும் தருவாயில் உள்ளது. இதையடுத்து, அணையின் பாதுகாப்பு கருதி நொடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

மைசூர் மாவட்டம், டி.நரசிப்புராவில் உள்ளது கபினி அணை. கடல் மட்டத்திலிருந்து 2,284 அடி மொத்த உயரம் உள்ள இந்த அணைக்கு, கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்திலிருந்து வரும் ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிறது. கேரளத்தில் அண்மையில் தென்மேற்குப் பருவ மழை தொடங்கியதை அடுத்து, கபினி அணையின் நீர்மட்டம் உயரத் தொடங்கியது.

இருந்தபோதிலும், கபினியிலிருந்து தமிழகத்துக்கு நொடிக்கு 100 கன அடி தண்ணீர் மட்டுமே திறந்து விடப்பட்டு வந்தது. அணை நிரம்பத் தொடங்கிய பிறகு, கடந்த 18-ஆம் தேதி முதல் வெளியேற்றப்படும் நீரின் அளவு நொடிக்கு 300 கன அடியில் தொடங்கி ஆயிரம் கன அடியாக உயர்த்தப்பட்டது.

இந்த நிலையில், கேரள மாநிலத்திலும், கபினி நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பலத்த மழை பெய்ததையடுத்து, திங்கள்கிழமை முதல் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. செவ்வாய்க்கிழமை நீர்வரத்து நொடிக்கு 25 ஆயிரம் கன அடியாக உயர்ந்தது.

இதையடுத்து, அணையின் பாதுகாப்பைக் கருதி, கபினி அணையிலிருந்து தமிழகத்துக்கு நொடிக்கு 15 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

தொடர் மழையால் கபினி அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்கக் கூடும் என்பதால், அணையிலிருந்து மேலும் கூடுதலாகத் தண்ணீர் வெளியேற்றப்படலாம் எனத் தெரிகிறது.

கூடுதலாக நீர் வெளியேற்றப்படுவதை செவ்வாய்க்கிழமை அறிவித்தாலும், கபினி அணையின் பாதுகாப்பைக் கருதி தமிழகத்துக்கு இரண்டு நாள்களுக்கு முன்பே தண்ணீர் திறந்துவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதை முறைப்படி அறிவித்தால் மண்டியா மாவட்ட விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும் என்பதால், தண்ணீர் திறந்துவிடப்பட்டது தாமதமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## மரபணு மாற்றுப் பயிர்களுக்கு எதிராக தேசிய பிரசாரம் தொடங்கியதுநமது நிருபர்

உயிரி தொழில்நுட்ப ஒழுங்குமுறை ஆணைய (ஆதஅஐ) சட்ட மசோதாவையும், மாற்றுப் பயிர்களை எதிர்த்தும் சமூக ஆர்வலர்கள் தேசிய அளவிலான பிரசாரத்தை தில்லியில் செவ்வாய்க்கிழமை தொடங்கினர்.

இதையொட்டி பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 450 அமைப்புகள் ஒருங்கிணைந்து உருவாக்கிய "மரபணு மாற்றுப் பயிர் இல்லாத இந்தியாவுக்கான அமைப்பு' (பட்ங் ஸ்ரீர்ஹப்ண்ஹற்ண்ர்ய் ச்ர்ழ் ஞ்ங்ய்ங்ற்ண்ஸ்ரீஹப்ப்ஹ் ம்ர்க்ண்ச்ண்ங்க் ச்ழ்ங்ங் ஐய்க்ண்ஹ) சார்பில் ஜந்தர் மந்தரில் அடையாள விழிப்புணர்வு தர்னா நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து, அமைப்பாளர் ஸ்ரீதர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி, காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் பிஷன் பீர் சிங், ஆம் ஆத்மி கட்சி தேசிய அமைப்பாளர் அரவிந்த் கேஜரிவால், உணவு கொள்கை ஆய்வறிஞர் தேவேந்திர சர்மா, தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஆர். செல்வம், "கிரீன் பீஸ்' இந்தியா அமைப்பின் நிர்வாகி நேகா சாய்கல், இந்திய விவசாய இயக்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர் யுத்வீர் சிங், தமிழ்நாடு உள்பட 18 மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், பல்வேறு அரசியல் கட்சிகளின் விவசாய அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மரபணு மாற்றுப் பயிர்களுக்கு எதிரான போராட்டத்தை ஆதரித்து பாஜக தலைவர் ராஜ்நாத் சிங் அனுப்பிய கடிதம் பிரசாரத்தின் தொடக்கத்தில் வாசிக்கப்பட்டது.

இப்போராட்டம் குறித்து ஸ்ரீதர் ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: உயிரி தொழில்நுட்ப ஒழுங்குமுறை ஆணைய மசோதா மரபணு மாற்றுப் பயிர்களை இந்தியாவில் திணிப்பதற்கான சட்டப் பூர்வ கருவியாக செயல்படும்.

எதிர்கால இந்திய விவசாயத்துக்கும், உணவுச் சூழலுக்கும் எதிரான சட்டமாக அது மாறும்.

இந்தச் சட்டத்தை அரசியல் கட்சிகள், குடிமக்கள், சமூக அமைப்புகள், பொதுமக்கள் எதிர்த்துப் போராட முன்வர வேண்டும். இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்குப் பதிலாக உயிரி பாதுகாப்புச் சூழலை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தில்லியில் தொடங்கியுள்ள பிரசாரம் அனைத்து மாநிலங்களிலும் நடைபெறும். அதன் தொடர்ச்சியாக, வரும் ஆகஸ்ட் மாதம் மீண்டும் தில்லி ஜந்தர் மந்தரில் அனைத்து

மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் திரண்டு மிகப் பெரிய போராட்டத்தை நடத்துவோம்' என்றார் அவர்.

பிரசாரத்தில் பங்கேற்ற உணவுக் கொள்கை ஆய்வறிஞர் தேவேந்திர சர்மா கூறியது:

"மான்சான்டோ போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் அமெரிக்கா போன்ற நாடுகளில் விவசாயம் மற்றும் விவசாயிகளின் விதியை முடிவு செய்கின்றன. அதற்கு வசதியாக அங்குள்ள அரசுகள் தேவையான சட்டங்களை இயற்றிப் பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாக செயல்படுகின்றன. உயிரி தொழில் நுட்ப ஒழுங்குமுறை ஆணையச் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டால், இந்தியர்கள் என்ன விவசாயம் செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய முடியாது.

ஒருபுறம் உணவுப் பாதுகாப்பு மசோதா குறித்து விவாதித்துக் கொண்டிருக்கும் மத்திய அரசு அதற்கு முரணாக உணவில் விஷம் கலக்கும் சட்ட மசோதாவையும் கொண்டு வருகிறது என்றார் அவர்.

### வால்பாறையில் 200 மி.மீ. மழை

தென்மேற்குப் பருவமழை கேரளத்தில் தீவிரமடைந்துள்ளதால், அதன் உபரி மழை வால்பாறை, நீலகிரி, மூணாறு உள்ளிட்ட இடங்களில் பெய்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி, அதிகபட்சமாக வால்பாறையில் 200 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. நீலகிரி மாவட்டம் தேவாலா, கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு பகுதியில் 160 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

வடமேற்கு வங்கக் கடல் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அதன் காரணமாக தமிழகத்தின் சில இடங்களில் பலத்த மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை ஒடிசா மற்றும் மேற்கு வங்கம் அருகே உள்ள கடல் பகுதிக்கு நகர்ந்து சென்று, தற்போது ஜார்க்கண்ட் அருகே வலுவிழந்துள்ளது. இதனால் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பில்லை என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இருப்பினும் தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் மற்றும் வெப்பச்சலனம் ஆகியவற்றின் காரணமாக மாநிலத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் புதன்கிழமை (ஜூன் 26) மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது

இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். பகல் வேளையில் தரைக் காற்று பலமாக வீச வாய்ப்புள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

வால்பாறை - 200, நீலகிரி மாவட்டம் தேவாலா, கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 160, நீலகிரி மாவட்டம் கூடலூர் - 90, பெரியாறு அணை - 70, நீலகிரி மாவட்டம் நடுவட்டம் - 50, நீலகிரி மாவட்டம் கேத்தி, கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை - 30, பாபநாசம், ஊட்டி, பொள்ளாச்சி - 20.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

26.06.2013 A.M

## நாட்டின் மாம்பழம் ஏற்றுமதி:ரூ.265 கோடியாக அதிகரிப்பு



புதுடில்லி:கடந்த 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் மாம்பழம் ஏற்றுமதி, 264.76 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 210 கோடி ரூபாயாகவும், 2010-11ம் நிதியாண்டில், 165 கோடி ரூபாயாகவும் இருந்தது என, "அபெட்டா' அமைப்பு தெரிவித்துள்ளது.இந்திய மாம்பழங்களுக்கு, உலகின் பல்வேறு நாடுகளில் அதிக வரவேற்பு காணப்படுகிறது. இதையடுத்து, நாட்டின் மாம்பழம் ஏற்றுமதி, ஒவ்வொரு ஆண்டும் சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளுக்கு, சென்ற நிதியாண்டில், மாம்பழம் ஏற்றுமதி, 162.87 கோடி ரூபாய்அளவிற்கு இருந்தது. இதையடுத்து, இங்கிலாந்து நாட்டிற்கான ஏற்றுமதி, 32.50 கோடி ரூபாயாக இருந்தது.மேற்கண்ட நாடுகள் தவிர, சவுதி அரேபியா (12 கோடி ரூபாய்), கத்தார் (8.87 கோடி), குவைத் (8.40 கோடி), வங்கதேசம் (7.76 கோடி), நேபாளம் (6.10 கோடி ), அமெரிக்கா (5.78 கோடி), சிங்கப்பூர் (4.20 கோடி) மற்றும் ஓமன் (3 கோடி ரூபாய்) ஆகிய நாடுகளுக்கும் சென்ற நிதியாண்டில், அதிகளவில் மாம்பழங்கள் ஏற்றுமதியாகியுள்ளன, என, "அபெட்டா' அமைப்பின் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மண் பாதுகாப்பு அட்டைக்குவிண்ணப்பிக்க அறிவுரை

கண்டமங்கலம்: கண்டமங்கலம் வட்டார சிறு, குறு விவசாயிகள் மண்வள பாதுகாப்பு அட்டைக்கு விண்ணப்பிக் குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சம்பத் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:கண்டமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்திற்குட்பட்ட 54 வருவாய் கிராமங்களில் தமிழக அரசு வேளாண்மை துறையின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு மண்வள பாதுகாப்பு அடையாள அட்டை எடுக்கும் பணி தற்போது நடந்து வருகிறது. தகுதியான சிறு, குறு விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை அணுகி மண்வள பாதுகாப்பு அட்டை பெற்று, பயன் பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுபிரசாரம்

விழுப்புரம்:விழுப்புரத்தில் மழைநீர் சேகரிப்பு பிரசாரத்தை சேர்மன் பாஸ்கரன் துவக்கி வைத்தார்.விழுப்புரம் பவ்டா சார்பில் மழை நீர் சேகரிப்பு பிரசாரம் நேற்று நடந்தது. காலையில் துவங்கிய விழிப்புணர்வு பேரணிக்கு பவ்டா இயக்குனர் ஜாஸ்லின் தம்பி தலைமை தாங்கினார். நகராட்சி சேர்மன் பாஸ்கரன் கொடியசைத்து, விழுப்புணர்வு பிரசார பேரணியைத் துவக்கி வைத்தார். நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் சுகவனம், சீனுவாசன், வருவாய் ஆய்வாளர் சாம்ராஜ், பவ்டா பொது மேலாளர் வருவேல், துணை பொது மேலாளர் சிவகுமார், செய்தி தொடர்பாளர் நாஞ்சில் சம்பத், முதுநிலை மேலாளர் சங்கர் மற்றும் மணிகண்டன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மணிமுக்தா ஆறு வறண்டதால் கிணற்று நீர் பாசனம் பாதிப்பு

தியாகதுருகம்:மணிமுக்தா ஆறு முற்றிலும் வறண்டதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணற்று நீர் பாசன விவசாயிகள் கடுமையாக பாதித்துள்ளனர்.கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் மணிமுக்தா ஆற்றின் குறுக்கே சூளாங்குறிச்சி அருகே அணை கட்டப்பட்டுள் ளது. இங்கிருந்து தியாகதுருகம் ஒன்றியத்தின் வழியே சென்று கடலூர் மாவட்டத்தில் கோமுகி நதியுடன் இணைகிறது.மழை காலத்தில் மட்டுமின்றி கோடையிலும் ஆறு வறண்டு போகாமல் சில ஆண்டுகளாக லேசான நீரோட்டம் இருந்தது. வறட்சியான சூழலிலும் பிரிதிவிமங்கலம், மடம், வடபூண்டி, சித்தலூர், பானையங்கால், கொங்கராயபாளையம், புதுஉச்சிமேடு, கூத்தக்குடி உள்ளிட்ட பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறையவில்லை.அணை வற்றியதுகடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் அணை நிரம்பவில்லை. இதனால் முன்னதாகவே அணை வற்றியது.

கோடையில் வெயிலின் தாக்கம் அதிகம் இருந்ததால் ஆற்றின் நீரோட்டம் முற்றிலும் நின்றது. வற்றாமல் இருந்த மணிமுக்தா ஆறு வறண்டு மணல் திட்டுகளாக மாறியது. இதனால் இங்கு நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது.இது கிணற்றுநீர் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் பெய்த மழையால் நீர் நிலைகளுக்கு எதிர்பார்த்த தண்ணீர் கிடைக்கவில்லை. தென்மேற்கு பருவ மழை துவங்கி இரு வாரங்களாகியும் லேசான தூரல் மட்டுமே பெய்தது.எதிர்பார்ப்பு நீர்மட்டம் வெகுவாக குறைந்ததால் விரைவில் மழை பெய்யும் நம்பிக்கையில் ஏக்கத்துடன் காத்திருக்கின்றனர்.

## திடீர் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் நேற்று மாலை திடீரென்று பெய்த மழையால் வெயிலின் தாக்கம் தணிந்து இதமான சூழல் நிலவியது.
புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்ட நிலையில் வரலாறு காணாத வறட்சி நிலவிவருகிறது. கோடை காலம் முடிந்தும் வெயிலின் தாக்கம் தணியவில்லை. மதியவேளைகளில் வெளியில் நடமாட முடியாத அளவுக்கு வெயில் வாட்டி வதைத்து வருகிறது.
நீண்ட இடைவெளிக்கு பின் நேற்று மாலை திடீரென்று மழை பெய்தது. அரைமணி நேரம் இடைவிடாது பெய்த மழையால் வெயிலின் தாக்கம் தணிந்து இதமான சூழல் நிலவியது. புதுக்கோட்டை மட்டுமின்றி அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி உள்ளிட்ட டெல்டா பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. உழவு பணிகளுக்கு இந்த மழை பயனுள்ளதாக அமைந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## இளம் விவசாயிகளுக்கு பயிற்சி நிறைவு விழா

கரூர்: கரூர் மாவட்டம், புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தில் இளம் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நிறைவு விழா நடந்தது.
இதில், திருச்சி நபார்டு உதவி பொது மேலாளர் சுரேஷ்குமார் தலைமை வகித்து பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன் முன்னிலை வகித்தார். இங்கு தமிழ்நாடு முழுவதும் வேளாண் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் தொழில் முனைவோரை உருவாக்க வேளாண் அறிவியல் மையத்தின் மூலம், ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த, 25 இளம் விவசாயிகளுக்கு, இரண்டு மாத இலவச வேளாண் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டது.

விழாவில், கரூர் நபார்டு உதவிப் பொது மேலாளர் பார்த்திபன், முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன், சரஸ்வதி ஊரக மேம்பாடு பயிற்சி மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரவியம், மைய நிறுவன அறங்காவலர்கள் ராஜவேலு, லட்சுமணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**வெல்லம் விலை வீழ்ச்சி உற்பத்தியாளர் கவலை**

வேலாயுதம்பாளையம்: வெல்லம் விலை வீழ்ச்சியடைந்து வருவதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் அருகே நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, புங்கோடை, குளத்துப்பாளையம், வேட்டமங்கலம், ஓலப்பாளையம், முத்தனூர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் விளையும் கரும்புகளை விவசாயிகள் புகளூரில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்து கரும்புகளை வெட்டுகின்றனர்.

பதிவு செய்யாத விவசாயிகள் வெல்லம் தயாரிக்கும் ஆலைகளுக்கு விற்பனை செய்கின்றனர். இவர்கள் கரும்புகளை சாறு பிழிந்து கொப்பரையில் காய்ச்சி பாகாக்கி, அச்சு வெல்லம், உருண்டை வெல்லங்களாக தயார் செய்து அருகாமையில் உள்ள பிலிக்கல் பாளையத்தில் உள்ள வெல்ல மண்டிக்கு கொண்டு சென்று ஏலம் விடுகின்றனர். இங்கு தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வியாபாரிகள் வெல்லத்தை ஏலமெடுத்துச் செல்கின்றனர். பின் உள்ளூர் மாவட்டங்களுக்கு மட்டுமல்லாது, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, உத்திரபிரதேசம், உத்ராஞ்சல், சண்டிகர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர்.

கடந்த வாரம் ஒரு சிப்பம் (30 கிலோ), 1,400 ரூபாய்க்கு விற்பனையான உருண்டை வெல்லம், 1,100 ரூபாய்க்கும், சிப்பம், 1,500 ரூபாய்க்கு விற்பனையான அச்சு வெல்லம், 1,200 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த வாரம் நடந்த ஏலத்தில் உருண்டை வெல்லம், அச்சு வெல்லம் விலை கடந்த வாரத்தை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதற்கு வெல்லம் வரத்து அதிகரித்ததாலும், விற்பனை குறைவாக இருப்பதாலும், தாராபுரம் வெல்ல மார்க்கெட்டிற்கு அதிக வியாபாரிகள் செல்வதால், வெல்லம் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

### தென்மேற்கு பருவமழையை எதிர்பார்க்கும் கரூர் விவசாயிகள்

கரூர்: குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் திறக்கப்படாததால், தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்து கரூர் மாவட்ட விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசன பகுதிகளில் குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறப்பது வழக்கம். ஆனால், கர்நாடகா அரசு ஜூனில் வழங்க வேண்டிய 10.16 டி.எம்.சி., தண்ணீரை இதுவரை வழங்கவில்லை. மேட்டூர் அணை நீர்மட்டம் 3.092 டி.எம்.சி., தண்ணீரே உள்ளதால், டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறக்கும்போது கரூர் மாவட்டத்தில் கரூர், கிருஷ்ணராயபுரம் மற்றும் குளித்தலை தாலுகா பகுதிகளில் விவசாய பணிகள் நடப்பது வழக்கம்.

ஆனால், மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படாததால், காவிரி நீரை நம்பி சாகுபடி செய்யும் கரூர் மாவட்ட விவசாயிகள் சாகுபடி பணியை தொடங்க பருவமழையை நம்பியுள்ளனர்.

கரூர் மாவட்டத்தில்சராசரியாக 652.20 மி.மீ., மழை பெய்வது வழக்கம். அதில், தென்மேற்கு பருவமழை மூலம் 238 மி.மீ., மழை பெய்யும். வழக்கமாக ஆண்டுதோறும் மே இறுதியில் இருந்து தென்மேற்கு பருவமழை பெய்யும். தொடர்ந்து ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் வரை ஆண்டு சராசரியில் 40 சதவீத மழை நீடிக்கும்.

ஆனால், நடப்பாண்டு கடந்த மே மாத இரண்டாவது வாரத்தில் ஓரளவுக்கு மழை பெய்தது. ஆனால், தொடர்ச்சியாக மழை இல்லை. ஜூன் மாதத்தில் 24 நாள் ஆகிவிட்ட நிலையில் கரூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

மேட்டூர் அணையிலும் இருந்து தண்ணீர் திறந்து விடப்படாத நிலையில், தென் மேற்கு பருவமழை பெய்வதும் தவறி உள்ளதால் கரூர் மாவட்ட விவசாயிகள், தென் மேற்கு பருவமழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். வருண பகவான் கைகொடுப்பாரா என்பது வரும் நாட்களில் தெரியும்.

### அமராவதி அணை நீர் கரூருக்கு வந்தாச்சு

கரூர்: அமராவதி அணையில் இருந்து குடிநீருக்காக திறந்து விடப்பட்ட தண்ணீர் நேற்று காலை கரூர் வந்தது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணை நீர்ப் பிடிப்பு பகுதியில், கடந்த மாதம் பரவலாக மழை பெய்தது. இதனால், அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் 39 அடியாக இருந்த போது, குடிநீருக்காக அமராவதி ஆற்றில் இருந்து, கடந்த 16 ம் தேதி வினாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

தொடர்ந்து 16ம் தேதி 1,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. கடந்த 21ம் தேதி முதல் 500 கன அடி தண்ணீர் குறைக்கப்பட்டு, 1,000 அடியாக தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. அமராவதி அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று காலை கரூர் நகரை வந்தடைந்தது. பல மாதங்களுக்கு பிறகு, அமராவதி அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர், ஆற்றில் வந்ததால், கரூர்- திண்டுக்கல் ரோட்டில் உள்ள அமராவதி ஆற்றுப்பாலத்தில் இருந்தும், கரூர் டவுன் லைட் ஹவுஸ் கார்னர் ஆற்றுப்பாலத்தில் இருந்தும் ஏராளமான பொதுமக்கள் தண்ணீரை பார்வையிட்டனர். சிலர் ஆற்றில் இறங்கி குளித்து மகிழ்ந்தனர்.

## ஆரஞ்சு பழ சாகுபடியில் மீண்டும் ஆர்வம்

ஊட்டி:நீலகிரியில், அழிந்து போன ஆரஞ்சு பழ சாகுபடியை, மீண்டும் துவக்க விவசாயிகள் ஆர்வம் தெரிவித்துள்ளதால், மானிய விலையில் செடிகளை வழங்க, தோட்டக்கலைத் துறை முடிவு செய்துள்ளது.நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் தூதூர்மட்டம், கிளிஞ்சடா, கொலக்கம்பை, கோத்தகிரி கூக்கல்தொரை, அரவேனு மற்றும் ஊட்டியின் சில இடங்களில், கடந்த சில ஆண்டுகளுக்கு முன், விவசாயிகள் பலர், ஆரஞ்சு சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர்; அதன் மூலம் நல்ல வருமானமும் பெற்று வந்தனர். அதை ஊக்குவிக்கும் வகையில், மாவட்ட தோட்டக்கலை துறை மூலம் மானியம் விலையில் ஆரஞ்சு நாற்றுகள் வழங்கப்பட்டு வந்தன.நோய் தாக்குதல்

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன், ஆரஞ்சு மரங்களை தாக்கிய நோயால், பல இடங்களில், ஆரஞ்சு சாகுபடியில் பெருத்த அடி விழுந்தது; மரங்கள் பட்டுப்போயின. விளைவு, விவசாயிகள் பலர், ஆரஞ்சு சாகுபடியை கைவிட்டனர். இந்நிலையில் குன்னூர், கோத்தகிரி அரவேனு, ஊட்டி உட்பட இடங்களில் உள்ள விவசாயிகள் பலர், மீண்டும் ஆரஞ்சு சாகுபடியை மேற்கொள்ள ஆர்வம் தெரிவித்துள்ளனர். சமீபத்தில், ஊட்டியில், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டத்தில், விவசாயிகள் பலர் ஆரஞ்சு சாகுபடியில் ஈடுபட விருப்பம் தெரிவித்தனர். இதை, ஊக்குவிக்க தோட்டக்கலை துறையினரும் உறுதியளித்துள்ளனர்.

மானிய விலையில் நாற்றுநீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் (கூடுதல் பொறுப்பு) மணி கூறுகையில்,""ஆரஞ்சு சாகுபடி செய்ய விருப்பம் தெரிவித்துள்ள, விவசாயிகள், தங்களுக்கு தேவையான ஆரஞ்சு பழ நாற்றுகளின் எண்ணிக்கையை, தோட்டக்கலை துறை அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். விவசாயிகளின் தேவைக்கேற்ப ஆரஞ்சு பழ நாற்றுகளை, 50 சதவீத மானிய விலையில் வழங்க தயாராக உள்ளோம்," என்றார்.

பல இடங்களில், விவசாய தோட்டங்களில், வன விலங்குகள் புகுந்து, விவசாயப் பொருட்களை நாசப்படுத்தி விடுவதால், பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது, என்ற புகாரையும் விவசாயிகள் பலர் முன்வைத்தனர். "வன விலங்குளை கட்டுப்படுத்தவும், குரங்குகளை பிடிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என, வனத்துறையினர் உறுதியளித்தனர்.

## துரியன் பழ சீசன்பர்லியாரில் துவக்கம்

குன்னூர்:நீலகிரி மாவட்டம் குன்னூர்-மேட்டுப்பாளையம் இடையே உள்ள பர்லியார் அரசு தோட்டக்கலை பண்ணையில் மருத்துவ குணம் நிறைந்த துரியன் பழ மரங்கள் அதிகளவில் உள்ளன. "இப்பழங்களில் உள்ள உஷ்ண தன்மையால், குழந்தை பாக்கியம் கிடைக்க வாய்ப்பு உள்ளது' என, நம்பப்படுகிறது. இதனால், தமிழகம் மட்டுமல்லாமல், பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மக்கள் அதிகளவில் இப்பழத்தை வாங்கி செல்கின்றனர். குன்னூர் பர்லியார் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 31 துரியன் பழ மரங்கள் உள்ளன; இவற்றின் சீசன் தற்போது துவங்கியுள்ளது. பண்ணையில் உள்ள துரியன் பழ மரங்கள் மற்றும் மங்குஸ்தான் பழ மரத்தில் இருந்த பழத்தை பறித்து விற்கும் உரிமை, தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. உரிமத்தை கல்லாறை சேர்ந்த பழனிசாமி என்பவர் 4.76 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்துள்ளார். வரும் செப்டம்பர் மாதம் 20ம் தேதி வரை மரங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

## நீலகிரியில் ஒரே நாளில்954 மி.மீ., மழை பதிவு

ஊட்டி:நீலகிரி மாவட்டத்தில், இரண்டு ஆண்டுகளுக்கு பின், தென் மேற்குப் பருவ மழை, தீவிரமாகப் பெய்து வருகிறது. நேற்று முன்தினம், ஒரே நாளில், 954 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.நீலகிரி மாவட்டத்தில், இரண்டு ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்தது; இந்த ஆண்டு, பரவலாகப் பெய்து வருகிறது. குறிப்பாக, ஊட்டி, கூடலூர், பந்தலூரில் அதிகளவில், மழை பெய்துள்ளது.நேற்று முன்தினம் ஒரே நாளில், 954 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.மழையால், கூடலூர் வட்டக் கொல்லி பகுதியில், இரு வீடுகள் இடிந்தன; அங்கிருந்த, 44 பேர் அருகேயுள்ள பள்ளியில், தங்க வைக்கப்பட்டு உள்ளனர். கூடலூர்,

பந்தலூரில், பள்ளிகளுக்கு, நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டு இருந்தது.நீலகிரி மாவட்ட, பேரிடர் மேலாண்மைப் பிரிவு, மீட்பு மற்றும் முன் எச்சரிக்கை நடவடிக்கையைத் திட்டமிட்டு உள்ளது. தீயணைப்பு, போலீஸ் மற்றும் வருவாய்த் துறையினர், தயார் நிலையில் உள்ளனர்.இந்த ஆண்டு, நீலகிரியில் பருவமழை, அதிகமாகப் பெய்யும் என, எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தாண்டு, ஜூன் மாதம் முழுவதும் பெய்த மழை, இந்த ஆண்டு, ஜூன் மாதத்தின், முதல், 15 நாட்களில் பதிவாகி உள்ளது.

## நீலகிரியில் இரண்டு ஆண்டுகளுக்கு பின் "பின்னியெடுத்த' பருவ மழை

ஊட்டி: நீலகிரி மாவட்டம் கூடலூர் நாடுகாணியில் மழை காரணமாக சாலையில் மரம் விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.தமிழக-கேரள எல்லையான சேரம்பாடி சோலாடி பகுதியில், நேற்று முன்தினம் இரவு 11:00 மணிக்கு, சாலையின் குறுக்கே ஒரு மரம் விழுந்தது. இங்கு யானைகள் நின்றிருந்ததால், மரத்தை அகற்ற முடியவில்லை. இதனால், அதிகாலை 4:00 மணிக்குதான் அகற்றப்பட்டன. இதனால், தமிழக-கேரள மாநில சாலையில், 6 மணி நேரம் போக்குவரத்து பாதித்தது. சோலாடி மற்றும் பொன்னானி ஆறுகளில் வெள்ளப்பெருக்கு அதிகரித்துள்ளது. கூடலூர் வட்டக்கொல்லி பகுதியில், இரு வீடுகள் இடிந்தன; அங்கிருந்த 44 பேர் அருகேயுள்ள ஊராட்சிப் பள்ளியில் தங்கி வைக்கப்பட்டுள்ளனர். கடும் மழை காரணமாக, நேற்று கூடலூர், பந்தலூரில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.மாவட்ட நிர்வாகம் "அலர்ட்'"மழை பாதிப்புகளால், ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது. மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தாலுகா அலுவலகத்தில் இருந்தும், தினமும் காலை 7:00 மணிக்குள், மழை நிலவரம், பாதிப்புகள் குறித்த விபரத்தை, மாவட்ட கலெக்டரின் நேர்முக உ<தவியாளருக்கு "எஸ்.எம்.எஸ்.,' மூலம் தெரியப்படுத்த வேண்டும்.மழை பாதிப்புகளை அவ்வப்போது, மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கு தகவலாக தெரிவிக்க வேண்டும்' என, மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. அதற்கேற்ப, மீட்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைப் பணியை மேற்கொள்ள தீயணைப்பு, காவல் துறையினர் என அனைத்து அரசு துறையினரும் தயார் நிலையில் உள்ளனர்.மழை அதிகமாகும்!இந்தாண்டு, நீலகிரியில் தென்மேற்கு பருவமழையின் தாக்கம் அதிகமாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தாண்டு (2012) ஜூன் மாதம் முழுக்க பெய்த மழையளவு, நடப்பாண்டு (2013) ஜூன் மாதத்தின் முதல் 15 நாட்களில் பதிவாகியுள்ளது. கண்காணிப்பு, கட்டுப்பாடு அவசியம்நீலகிரி ஆவண காப்பக இயக்குனர் தர்மலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை:உத்தரகண்டில் ஏற்பட்டுள்ள பேரிடர்

பாதிப்பு, நீலகிரி மாவட்ட மக்களுக்கு லேசான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மழைக் காலங்களில் நிலச்சரிவு, மண் சரிவு பாதிப்புகளில் பழகிப் போன நீலகிரிக்கு, தற்போது பெய்து வரும் மழையாலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மாவட்டத்தில், அனுமதியற்ற கட்டடங்களை கட்டுப்படுத்த வேண்டும்; 33 டிகிரிக்கு மேல், சரிவான பகுதிகளில் விவசாயம் செய்வதை தவிர்க்க வேண்டும். பொக்லைன் மூலம் மண் அகற்றுவதை தடுக்க வேண்டும். இவ்வாறு தர்மலிங்கம் கூறியுள்ளார்.

## வாழையில் குறுக்கே வளர்ந்த தார்

ஈரோடு: ஈரோடு மூலப்பாளையத்தில் தண்டை பிழந்து, குலை தள்ளிய வாழைக்காயை, பொதுமக்கள் அதிசயத்துடன் பார்த்து சென்றனர்.

ஈரோடு மூலப்பாளையத்தில் வசிப்பவர் சேகர். இவர் தனது வீட்டில் சில மாதங்களாக ரஸ்தாளி வாழை மரங்களை வளர்த்து வருகிறார். நேற்று முன்தினம் வீசிய பலத்த காற்றில், அவர் வளர்த்த வாழை மரங்கள் கடும் ஆட்டம் ஆடியது.

எனவே, வாழை மரங்களை பார்க்க சென்ற சேகர், தண்டை பிழந்து வளர்ந்திருந்த வாழைக்காய்களை கண்டு ஆச்சர்யம் அடைந்தார். இத்தகவல் அப்பகுதியில் பரவியதால், பொதுமக்கள் பலரும் சேகரின் வீட்டுக்கு சென்று, அந்த வாழை மரத்தை ஆச்சர்யத்துடன் ரசித்தனர். கண்ணாடி இலைகள் வந்த பின், பூவைத்து, வாழை சீப்பு வைப்பது வழக்கம். ஆனால், தண்டுக்குள் இருந்து, குலை தள்ளிய வாழை மரம் அதிசயமாக உள்ளதென, சேகர் தெரிவித்தார்.

## விவசாயம் பொய்த்ததால் மூடப்பட்டு வரும் சில்வர் பட்டறை

காரைக்குடி:மழையின்றி விவசாயம் பொய்த்ததால் காரைக்குடியில் உள்ள சில்வர் பட்டறைகள் மூடப்பட்டு வருகின்றன.

காரைக்குடி முத்துப்பட்டணத்தில்,30க்கும் மேற்பட்ட சில்வர் பட்டறைகள் உள்ளன. இங்கு கொட்டான்,பால்குடம், நெய்வாளி, அடுக்கு பாத்திரங்கள் செய்யப்படுகிறது.சிறந்த நேர்த்தியை கடைபிடிப்பதால்,செட்டிநாட்டு சில்வர் பொருட்களுக்கு, தமிழகம் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் மவுசு உள்ளது. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு, சேலம் தகடு மட்டுமன்றி, ஜப்பான் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து தகடுகள் இறக்குமதி செய்யப்பட்டு, சில்வர் பாத்திரங்கள் செய்யப்பட்டது.சில்வர் பொருட்களின் விலையும் குறைவாக இருந்தது. தற்போது சேலம் தகடுகளின் தரத்தால், இறக்குமதி குறைந்து இங்கிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதியாகிறது.சேலம் தகடின் விலை கிலோ ரூ.325 ஆக உள்ளது. இவை பாத்திரமாக மாறும்போது, கிலோ 500 முதல் 550 வரை விற்க

வேண்டியதுள்ளதால், தமிழகத்தில் உள்ள சில்வர்பட்டறை வியாபாரிகள், சேலம் தகடை வைத்து பாத்திரங்கள் தயாரிக்கும் போது, அவற்றை கடைகளில் விற்பனை செய்ய முடிவதில்லை.

தற்போது,புனே,அகமதாபாத் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வாங்கப்படும் தகடு மூலம் தமிழகத்தில் பாத்திரங்கள் செய்யப்படுகிறது. இது கிலோ ரூ.125 லிருந்து 200 வரை விற்கப்படுகிறது. விவசாயிகள்,வீட்டில் சுப நிகழ்ச்சி நடத்தும்போது, சீர்வரிசை பட்டியலில், சில்வர் பாத்திரங்கள் பிரதான இடத்தை பிடித்து வந்தன. தற்போது மழையின்மையாலும், விலைவாசி உயர்வாலும், சீர்வரிசை பட்டியலில், சில்வரின் பயன்பாட்டை வெகுவாக குறைத்து விட்டனர். இதனால், இருக்கின்ற ஒரு சில பட்டறைகளும் மூடப்படும் நிலையில் உள்ளது.

காரைக்குடி எவர்சில்வர் பட்டறை உரிமையாளர் சங்க செயலாளர் வெள்ளைச்சாமி கூறும்போது: சில்வர் பாத்திரங்களை அதிகம் விரும்புவது நடுத்தர விவசாய மக்கள் தான். "தை'-யில் அறுவடை முடிந்ததும், சுபகாரியங்களை நடத்துவார்கள். சிறிய பொருட்களிலிருந்து பெரிய அண்டாவரை பட்டியல் போட்டு, 10 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை வாங்குவார்கள். தற்போது மழையின்றி விவசாயம் இல்லை. இதனால்,விவசாயிகள்,குறைந்த அளவில் பொருட்களை வாங்குகின்றனர். விவசாயம் பொய்த்தால்,விவசாயி மட்டும் பாதிக்கப்படுவதில்லை, அதனைச் சுற்றியுள்ள அத்தனை தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுக்கு முன்பு 200க்கும் மேற்பட்ட பட்டறைகள் காரைக்குடியில் இருந்தது. தற்போது 40க்கும் குறைவான பட்டறைகளே உள்ளன. வேலைக்கு ஆட்கள் இல்லாதது,வாரிசுகள் இதில் இடம் பெறாததும், சில்வர் பட்டறைகளின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம்,என்றார்.

## தஞ்சை நகராட்சியில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

தஞ்சாவூர்: தஞ்சை ரயில்வே ஸ்டேஷனில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நேற்றுக்காலை துவங்கியது. இதில், கலெக்டர் பாஸ்கரன் கொடியசைத்து துவக்கி வைத்தார். தஞ்சை நகராட்சி தலைவர் சாவித்திரி, கமிஷனர் ரவிச்சந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

இதில், மழை நீரை சேகரிப்பதால் ஏற்படும் நன்மை, சேகரிக்கும் முறை உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர் பங்கேற்று, நோட்டீஸ்களை மக்களிடம் வினியோகித்தனர்.

மழைநீரை சேகரிப்போம், மண்வளம் காப்போம், இன்றைய மழை நீர் சேகரிப்பு, நாளைய குடிநீர் பாதுகாப்பு என்பது உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய தட்டிகளை கைகளில் ஏந்தி சென்று, கோஷங்களை எழுப்பினர்.

இதற்கான ஏற்பாட்டை தஞ்சை மாவட்ட நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும் இணைந்து செய்திருந்தது.

## குறுவை சிறப்பு தொகுப்பு திட்ட பயனாளிகள்

தஞ்சாவூர்: ""டெல்டா மாவட்டங்களில், குறுவை சாகுபடி மேற்கொள்ள அரசு அறிவித்துள்ள சிறப்பு தொகுப்பு திட்ட பயனாளிகளை ஒருவாரத்தில் தேர்வு செய்ய வேண்டும்," என, அதிகாரிகளுக்கு வேளாண் துறை முதன்மை செயலர் சந்தீப் சக்சேனா உத்தரவிட்டுள்ளார்.

தஞ்சையில், கலெக்டர் அலுவலகத்தில் வேளாண்மை உற்பத்தி கமிஷனர் மற்றும் முதன்மை செயலர் சந்தீப் சக்சேனா தலைமையில், ஆய்வுக்கூட்டம் நடந்தது. இதில், தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர், திருச்சி ஆகிய டெல்டா மாவட்டங்களுக்கு குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்துதல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. வேளாண் துறை இயக்குனர் ராஜேந்திரன், தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் முன்னிலை வகித்து பேசினர்.

வேளாண் உற்பத்தி கமிஷனர் மற்றும் முதன்மை செயலர் சந்தீப் சக்சேனா பேசியதாவது: குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தை செயல்படுத்த விவசாயத்துறை மட்டுமின்றி இதர துறைகளை சார்ந்த அலுவலர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

ஐந்து மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர்கள், விவசாய இடுபொருட்களை தயார் நிலையில் வைக்க வேண்டும். மின்சார வாரிய அதிகாரிகள் மின்சார பகிர்வை சரியான முறையில் அளிக்க வேண்டும். மின்மாற்றிகள் பழுது ஏற்பட்டால், அதை உடனடியாக போர்க்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு 12 மணி நேரம் அளிக்கப்படும் மின்சாரத்தை ஆறு ப்ளஸ் ஆறு மணி நேரமாக பகுதியாக பிரித்து அளிக்க வேண்டும். மின்சாரம் வினியோகிக்கும் நேரத்தை பத்திரிக்கைகள் மூலம் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்.

குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தில், இத்தகைய சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானிய விலையில், உயிர் உரம், நெல் நுண்ணூட்டம், உயிர் பூச்சி கொல்லிகள் மற்றும் ஜிப்சம் விரைவில் வழங்கப்படும்.

நீர் இழப்பை குறைக்கும் வகையில், 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 180 மீ., நீளம், 90 மி.மீ.,

விட்டம் கொண்ட ஹெச்.டி.பி.இ., குழாய்கள் விலையின்றி விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்ட பயனாளிகளை ஒருவாரத்தில் தேர்வு செய்ய வேண்டும். விவசாய நடவு இயந்திரத்தை தயார் நிலையில் வைக்க வேண்டும். வேளாண் பொருட்களுக்கு வங்கி மூலம் குறுவை சாகுபடிக்கு கடனுதவி வழங்க வேண்டும்.

குறுவை சாகுபடி பரப்பை, வி.ஏ.ஓ.,கள் தங்கள் அடங்கலில் விடுபடாமல் பதிவு செய்ய வேண்டும். இடுபொருள் பயன், உபயோகிக்கும் முறை குறித்து நோட்டீஸ் அச்சிட்டு விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டும்.

பயிர்க்கடன், நகைக்கடன்களை விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வங்கியாளர் வழங்க வேண்டும். பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு விரைவில் சூரிய ஒளி பம்ப்செட் அமைக்கப்படும். இப்பணிகளை போர்க்கால அடிப்படையில் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு, அவர் பேசினார்.

ஆய்வுக்கூட்டத்தில், வேளாண் பொறியியல்துறை தலைமை பொறியாளர் செந்தில், வேளாண் கூடுதல் இயக்குனர் (பொ) கணேசன், இணை இயக்குனர்கள் ராமதாஸ் (தஞ்சை), கணேசன் (திருவாரூர்), ராஜேந்திரன் (நாகை), குருராஜ்சிங் (திருச்சி), ராதாகிருஷ்ணன் (கடலூர்) உள்பட அதிகாரிகள் பங்கேற்றனர்.

# விவசாய மலர்

## நவீன தொழில் நுட்பத்துடன் கரும்பு நாற்றுகள்



பசுமைக்குடில் அமைத்து தண்ணீர் சிக்கனத்துடன் நவீன தொழில் நுட்பத்தில் கரும்பு நாற்றுகள் உற்பத்தி செய்யும் பணியில், மதுரை பாப்பாபட்டி ஊராட்சித் தலைவர் முருகானந்தம் ஈடுபட்டுள்ளார்.

**கரும்பு நாற்றில் நவீன தொழில் நுட்பம்:** சாதாரணமாக கரும்பு நடவுக்காக கரும்பின் பகுதியில் இரண்டு கணு அல்லது மூன்று கணு உள்ளவாறு வெட்டி ஏக்கருக்கு (இருபரு கரணை, முப்பரு கரணை) 30 முதல் 35 ஆயிரம் கரணைகள் நடவு செய்ய வேண்டும். நடவு செய்து ஒரு மாதம் கழித்துதான் எந்தந்த பகுதியில் கரணை வளரவில்லை என்பது

தெரியவரும். அந்த இடத்தில் வேறு கரணை நடவு செய்ய வேண்டும். தற்போது கரும்பில் கணுவின் சிறு பகுதியை மட்டும் செதுக்கி எடுத்து நாற்றுகள் வளர்த்து பின்னர் நடவு செய்யும் நவீன தொழில் நுட்பம் வந்துள்ளது. அலங்காநல்லூருக்கு உட்பட்ட 12 பகுதிகளில் ஒரு லட்ச ரூபாய் மானிய உதவியுடன் இந்த கரும்பு நாற்றுகள் வளர்க்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நவீன முறை கரும்பு நாற்று உற்பத்தி செய்யும் பணியில் பாப்பாபட்டி ஊராட்சித் தலைவரான முருகானந்தம் ஈடுபட்டுள்ளார்.
**முருகானந்தம் கூறியதாவது:** மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., அரசியல் விஞ்ஞானம் படித்து விட்டு 2001 முதல் எனது தந்தை பார்த்த விவசாயத் தொழிலில் ஈடுபடுகிறேன். அன்று முதல் ஆண்டு தோறும் சுமார் பத்து முதல் 12 ஏக்கர் வரையில் கரும்பு பயிரிட்டு வருகிறேன். 2011ல் அலங்காநல்லூர் கூட்டுறவு கரும்பு ஆலையில் இருந்து, நவீன தொழில் நுட்பமாக கரும்பு நாற்று உற்பத்தி செய்யும்படி ஆலோனை வழங்கினர். மேலும், இந்த திட்டத்திற்கு ஒரு லட்சம் வரை மானிய உதவி கிடைக்கும் என்றும் கூறினர்.
அதைத் தொடர்ந்து பசுமைக்குடில் அமைத்து கரும்பு நாற்று உற்பத்தி செய்து விவசாயிகளுக்கும், எனது சொந்த நிலத்திற்கும் பயன்படுத்தி வருகிறேன். சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய 30 ஆயிரம் இருபரு கரணை தேவைப்படுகிறது. இதற்கு பதினைந்தாயிரம் ரூபாய் மற்றும் போக்குவரத்துச் செலவும் ஏற்படும்.
நவீன தொழில் நுட்பத்தில் கரும்பின் ஒரு கணுவில் உள்ள பரு பகுதியில் சிறிய அளவில் வெட்டி எடுத்து பிளாஸ்டிக் டிரேக்களில் தென்னை நார் கம்போஸ்ட் மற்றும் உரங்கள் கலந்து வளர்க்கப்படுகிறது. நாற்று நடவின் மூலம் ஏக்கருக்கு ஐந்தாயிரத்து 500 நாற்றுகள் மட்டும் தேவைப்படுகிறது. இதற்கு ஏழாயிரம் ரூபாய் வரை செலவாகும். எட்டு முதல் ஒன்பது மாதம் வயதான கரும்பின் கணுவில், சிறு பகுதியை மட்டும் வெட்டி எடுப்பதால் சுமார் நான்கு முதல் ஐந்துடன் கரும்பு மிச்சமாகிறது. ஒருமாதம் வரை நாற்றுகள் பசுமைக்குடிலில் பராமரிக்கப்படுவதால், விவசாயிகளுக்கு கரும்பு பயிரிட ஒருமாதம் வரை தண்ணீர் பாய்ச்ச வேண்டியதும் மிச்சமாகிறது.
தற்போதுள்ள பசுமைக்குடிலின் மூலம், ஒரு லட்சம் கரும்பு நாற்றுகள் தயாரிக்க முடியும். நாற்று ஒன்று உற்பத்தி செய்ய ஒரு ரூபாய் வரை செலவாகிறது. விவசாயிகளுக்கு ஒரு ரூபாய் முப்பது காசுகளுக்கு விற்பனை செய்கி றோம். இதுதவிர காய்கறி, பயறு வகை நாற்றுகளும் இங்கு உற்பத்தி செய்து தருகிறோம். அக்டோபர் மாதம் முதல் மார்ச் வரையிலான மழைக்காலத்தில் கரும்பு நாற்றுகள் விவசாயிகளுக்கு உற்பத்தி செய்து

தருகிறோம் என்றார்.

தண்ணீர் பற்றாக்குறை, நேரப்பற்றாக் குறை என வேகமாக செல்லும் காலத்திற்கேற்ப நவீன முறையில் விவசாயத்தில் ஈடுபடும் இவரை பாராட்டவும், ஆலோசனைகள் கேட்கவும் 89409 29289 ல் தொடர்பு கொள்ளலாம்.

## சின்னச்சின்ன செய்திகள்



கறிவேப்பிலை சாகுபடிக்கு மானியம் உண்டு

மாவட்டங்களில் போதிய அள வுக்கு கறிவேப்பிலை சாகுபடி செய்யப்படவில்லை. கறிவேப் பிலை சாகுபடியை வேளாண்துறை ஊக்குவித்து வருகிறது. கறிவேப்பிலை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தோட்டக் கலைத்துறையை அணுகி கறிவேப்பிலை செடிகளை மானியத்துடன் பெற்றுச் செல்லலாம். கறிவேப்பிலை அதிக வருமானம் தரும் பயிராகும். ஓர் ஆண்டு பயிர் செய்தால் பல ஆண்டுகள் வரை பராமரித்து அதிக வருமானம் பெறலாம். நோய், பனி ஆகியவை அதிகளவு தாக்காத பயிர் கறிவேப்பிலை. இதனைப் பயிரிட அதிக வேலை ஆட்கள் தேவை யில்லை. பராமரிப்பு செலவும் குறைவு.

சேலம் மாவட்டம் ஆத்தூர், தலைவாசல் பகுதிகளில் கறிவேப் பிலை சாகுபடிசெய்யும் விவசாயிகள் நல்ல லாபம் பெற்று வருவதாகத் தெரிகிறது.கோவிந்தம்பாளையம், நத்தக்கரை, விரகனூர், தலைவாசல் ஆகிய பகுதிகளில் 500க்கும் மேற் பட்ட விவசாயிகள் கறிவேப்பிலை பயிரிட்டுள்ளனர். கறிவேப்பிலை மூலம் ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இங்கு உற்பத்தியாகும் கறிவேப்பிலை வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

தினசரி வெறும் வயிற்றில் கறிவேப்பிலை இலையை 3 மாதங்கள் சாப்பிட்டுவந்தால் நீரிழிவால் உடல் கனமாவது குறைக்கப்படுகிறது. கறிவேப்பிலை ரத்தத்தில் இருக்கும்

கொழுப்பைக் குறைக்கவும் அறிவைப்பெருக்கவும் உதவுகிறது. கறிவேப்பிலையை பச்சையாக மென்று தின்றால் குரல் இனிமையாகும். சளியும் குறையும்.
மணல்கலந்த செம்மண், வண்டல் மண் மற்றும் நல்ல வடிகால்வசதியுள்ள மண் தேவை. பெரிய செடியாக வளர்க்க 2.5 மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். அதிக மகசூல் பெற 60செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். 45 முதல் 60 நாட்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். பூமியிலிருந்து 30 செ.மீ. உயரம் விட்டு அறுவடை செய்ய வேண்டும்.
அடியுரம் 1 அடி ஆழத்தில் சதுர குழி தோண்டி நாற்றுகளைச் சுற்றி மக்கிய தொழு உரம் இடவேண்டும். நட்டவுடன் ஒரு முறையும் பின்னர் வாரம் ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னரும் ஒரு செடிக்கு 20 கிலோ தொழு உரத்தை இட்டு கொத்திவிட வேண்டும்.

விலை குறைவான சில கருவிகள் பற்றி காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங் குளத்தூர் அருகே செயல்பட்டு வரும் காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தின் வேளாண் தொழில்நுட்பப் பிரிவில் உதவி பேராசிரியராகப் பணிபுரியும் சித்தார்த் தெரிவிக்கிறார்.
**எலிப்பொறி:** நெல், காய்கறி, பழத்தோட்டங் களில் எலிகளின் தொல்லை அதிகமாக இருக்கும். அவற்றைப் பிடிக்க பிரத்யேகமான கருவி உள்ளது. இக்கருவியின் உதவியோடு ஒரே சமயத்தில் 20க்கும் மேற்பட்ட எலிகளைப் பிடிக்க முடியும். இதனைத் தூக்கிச் செல்வதும் எளிது. பொறியின் இரண்டு பக்கமும் துவாரங்கள் இருக்கும். ஒரு துவாரத்தின் வழியாக எலிக்கான தீவனத்தை வைக்க வேண்டும். அதைச் சாப்பிட இன்னொரு துவாரத்தின் வழியாக பொறிக்குள் நுழையும் எலிகள் வெளிவர முடியாத அளவிற்கு மாட்டிக் கொள்ளும். வயலில் 4 மூலைகளிலும் இப்பொறிகளைத் தொடர்ச்சியாக வைத்தால் கணிசமான அளவில் எலிகளைப் பிடித்துவிடலாம்.
புதிதாக வாங்கிய பொறியை எந்தத் தீனியும் வைக்காமலேயே வயலில் நான்கு மூலைகளிலும் இரண்டு நாட்களுக்கு வைத்துவிட வேண்டும். மூன்றாம் நாள் அதில் கருவாடு, சுட்ட தேங்காய், வடை இவற்றில் ஏதாவது ஒன்றை வைத்து விட்டால் எலிகள் மாட்டத் தொடங்கும். இதை வீடுகள், கடைகளிலும் பயன்படுத்தலாம். (தொடர்புக்கு: சித்தார்த், 044-2745 2371, 94432 11602). எலிப்பொறி தவிர பெருநெல்லிக்காய் விதை நீக்கும் கருவி, தென்னைமரம் ஏறும் கருவி, நிலக்கடலை ஓடு நீக்கும் கருவி ஆகியவை பற்றிய தகவல்களையும் பெறலாம்.

**மக்காச்சோள ரகம் சூப்பர் 244, ஏ.டீ.எம்.:** விவசாயிகளின் ஏகோபித்த பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. மேலும் விபரங்களுக்கு: காவேரி சீட் கம்பெனி லிமிடெட், 1/27, ஏ.பீ. காந்திநகர், 2வது தெரு, காட்டூர் பஸ் ஸ்டாப் அருகில், வடகாட்டூர், திருச்சி-19. 99944 15020. தென்தமிழகம்-99442 67829. சேலம், தர்மபுரி-99943 34196; திண்டுக்கல், கோவை-98942 60469.

**ஆடு தின்னாபாலை**



ஆடுதின்னாபாலை மூலிகையானது அரிஸ்டோலோகியா பிராக்டியோலேட்டா என்ற தாவரவியல் பெயரில் அரிஸ்டோலோகியேசி என்ற குடும்பத்தில் காணப்படுகிறது. இது தமிழில் ஆடுதின்னாப் பாலை என்றும் மற்றும் வணிக ரீதியாக கிடாமர் என்றும், ஆங்கிலத்தில் வர்ம் கில்லர் என்றும் வழங்கப்படுகிறது. இதன் தாயகம் மேற்கு ஆப்பிரிக்காவாகும். அரிஸ்டோலோகியாவில் மொத்தம் 400 இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இம்மூலிகையானது ஆப்பிரிக்கா, அரேபியா, பாகிஸ்தன் மற்றும் இலங்கையிலும் இந்தியாவில் மேற்கு வங்கம், கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் காணப்படுகிறது. இது பொதுவாக உலர்ந்த கரிசல் மண் பூமியில் காணப்படும் களையாகும். தமிழகத்தின் கரிசல் மண் பிரதேசங்களில் குறிப்பாக மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படுகிறது.

இத்தாவரமானது 0.5மீ வரை வளரக்கூடிய கொடி வகையைச் சார்ந்தது. பூக்கள் குழல் வடிவில் பழுப்பு நிறத்தோடும் இலைகள் இதய வடிவிலும் காணப்படும். ஜுலை - நவம்பர் மாதங்கள் இதற்கு ஏற்ற கால சூழ்நிலையாகும்.

**மருத்துவப் பயன்கள்:** ஆடுதின்னா பாலையின் இலை, தண்டு, வேர் எல்லாமே மருந்தாகப் பயன் படுகிறது. அதிகமான கசப்புத் தன்மையே இதன் சிறப்பாகும். இதில்

அரிஸ்டோலோகின் என்ற மருந்துப்பொருள் உள்ளது.

ஆடுகள் தின்னாத பாலை என்றபோதிலும் கால்நடைகளில் மலட்டுத் தன்மையை நீக்க முக்கிய மருந்தாக கிராமங்களில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் பாரம்பரியமாக பாம்பு கடி மற்றும் காயங்கள் ஆறவும் பயன்படுத்தப்பட்ட இம்மூலிகை சீன மருத்துவத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

அதிக கசப்பினைக் கொண்டுள்ளதால் மனிதன் மற்றும் விலங்குகளில் குடல்புழு பிரச்னையை நீக்கப் பயன்படுகிறது. மேலும் அறிவியல் மருத்துவத்தில் புற்றுநோய் மற்றும் நுரையீரல் வீக்க நோய்களுக்கு நிவாரணியாக பரிந்துரைக்கப்படுகிறது. சோரியாஸிஸ் போன்ற தோல் நோய்களுக்கு இம்மூலிகையின் சமூலமானது தேங்காய் எண்ணெயில் காய்ச்சப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக கால்நடை மருத்துவத்தில் பெரும்பங்காற்றுகிறது.

**சந்தைப்படுத்துதல்**: தற்போது இம்மூலிகையானது மதுரை, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் மூலிகை சேகரிப்போரால் தரிசு நிலங்களில் இருந்து சேகரித்து நன்கு காயவைக்கப்பட்டு மூலிகை வியாபாரிகளிடம் விற்பனை செய்யப் படுகிறது.

நன்கு காய்ந்த நிலை என்பது இதனுடைய இலை, தண்டு, காய் போன்றவை நன்கு உலர்தலாகும். மேலும் மூலிகை மருந்து கம்பெனிகளாலும் நிறைய அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனுடைய இனப்பெருக்கம் விதைகள் மூலமே நடைபெறுகிறது. இத்தாவரம் பாதுகாக்கப்பட வேண்டிய மூலிகை என்பதால் நிலைத்த அறுவடை பின்பற்றப்பட வேண்டும்.

இதுவும் வருமானம் தரும் களையேயாகும்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

26.06.2013 A.M

## காவிரியில் 10 டிஎம்சி நீர் கர்நாடகா அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு




காவிரியிலிருந்து தமிழகத்துக்கு தர வேண்டிய 10 டி.எம்.சி தண்ணீரை திறந்து விடுமாறு கர்நாடகாவுக்கு உத்தரவிடக் கோரி தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 10 நாட்களாக கர்நாடகாவில் பெய்து வரும் மழை காரணமாக கர்நாடக அனைகளில் சுமார் 26 டி.எம்.சி வரை தண்ணீர் வரத்து இருக்கிறது. எனவே தமிழகத்துக்கு ஜூன் மாதத்துக்கு தரவேண்டிய 10 டி.எம்.சி தண்ணீரை உடனடியாகத் திறந்து விட கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் தமிழக அரசு சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து காவிரி மேலான்மை வாரியம் மற்றும் காவிரி ஒழுங்குமுறை வாரியம் அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. மேர்பார்வைக் குழுவுக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு உத்தரவிட எந்த அதிகாரமும் இல்லை என்று விமர்சனம் செய்த கர்நாடகா முதல்வர் சித்தராமையா மற்றும் தலைமை செயலர் எஸ்.வி.ரங்கநாத் ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

**கபினி அணையில் இருந்து 10 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றம்**



காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள குடகு மாவட்டத்தில் பலத்த மழை பெய்து வருவதால், ஹாரங்கி, கபினி அணை வேகமாக நிரம்பி வருகிறது. கர்நாடக மாநிலம் காவிரி டெல்டா பகுதியில் கடந்த ஒருவாரமாக நல்ல மழை பெய்து வருகிறது. அதன் காரணமாக கே.ஆர்.எஸ்., கபினி, ஹாரங்கி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. கே.ஆர்.எஸ். அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 300 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையின் நீர்மட்டமும் உயர்ந்து 80.25 அடியாகவுள்ளது. தற்போது பெய்து வரும் மழை நீடித்தால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, அணை வேகமாக நிரம்பும் வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது. மொத்தம் 2,284 அடி உயரமுள்ள கபினி அணையில் நேற்று மாலை நிலவரபடி 2,278.50 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 25 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. கபினி அணை நிரம்ப இன்னும் 6 அடி மட்டுமே பாக்கியுள்ளது.

**டெல்டா மாவட்டங்களில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்ட பயனாளிகள் யார்?**



தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர், திருச்சி ஆகிய டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தை செயல்படுத்துதல் தொடர்பான அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது.கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலர்

சந்தீப் சக்சேனா பேசியதாவது: குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தை செயல்படுத்த விவசாய துறை மட்டுமின்றி மற்றும் இதர துறைகளை சார்ந்த அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். 5 மாவட்ட வேளாண் இணை இயக்குனர்களும், விவசாய இடுபொருட் களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மின் துறை அலுவலர்கள் மின் பகிர்வு சரியான முறையில் அளிக்க வேண்டும். டிரான்ஸ்பார்மர்களில் பழுது ஏற்பட்டால் அதை உடனடியாக போர்க்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டும்.விவசாயிகளுக்கு 12 மணி நேரம் அளிக்கப்படும் மின்சாரத்தை பகலில் 6 மணி நேரம், இரவில் 6 மணி நேரம் என பிரித்து கொடுக்க வேண்டும். மின்சாரம் வழங்கப்படும் நேரத்தை முன்கூட்டியே விவசாயிகளுக்கு நாளிதழ்கள் வாயிலாக தெரிவிக்க வேண்டும். குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 100% மானிய விலையில் உயிர் உரங்கள், நெல் நுண்ணூட்டம், உயிர் பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஜிப்சம் விரைவில் வழங்கப்பட உள்ளது. நீர் இழப்பை குறைக்கும் வகையில் 20 ஆயிரம் மதிப்புள்ள 180 மீட்டர் நீளம், 90 மி.மீ. விட்டம் கொண்ட எச்டிபிஇ பைப்புகள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இத்திட்ட த்தை முறையாக உரிய பயனாளிகளுக்கு அலுவலர்கள் கொண்டு சேர்க்க வேண்டும்.குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்திற்கான பயனாளிகள் தேர்வை ஒரு வாரத்திற்குள் முடிக்க வேண்டும். விவசாய நடவு இயந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். விவசாயிகளுக்கு வங்கி மூலம் குறுவை சாகுபடிக்கு தேவையான கடனுதவியை உடனடியாக வழங்க வேண்டும்.குறுவை சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குறுவை சாகுபடி பரப்புகளை விஏஓக்கள் தங்களுடைய அடங்கலில் விடுபாடின்றி பதிவு மேற்கொள்ள வேண்டும். இடுபொருட்கள் வழங்கும்போது அவற்றின் பயன் பாடுகள், உபயோகிக்கும் முறைகள் குறித்த துண்டு பிரசுரங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகள், நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரம் ஆகிய இடுபொருட்கள் அடங்கிய இடுபொருள் பையில் வைத்து விவசாயிகளுக்கு விரைந்து வழங்கப்பட வேண்டும். பயிர்க்கடன், நகைக்கடன்களை விவசாயிகளுக்கு வங்கியாளர்கள் முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக வழங்க வேண்டும். பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு விரைவில் சூரிய ஒளி பம்ப்செட்டுகள் அமைக்க நடவடிக்கை

மேற்கொள்ளப்படும்.முதல்வர் இரண்டாம் பசுமைப்புரட்சி ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் விவசாயிகளுக்கு சென்றடையும் வகையில் அறிவித்த இத்திட்டங்களை வேளாண்துறை அலுவலர்கள் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு திட்டங்கள் முழுமையாக விவசாயிகளுக்கு சென்றடைய பாடுபட வேண்டும்.இவ்வாறு சந்தீப் சக்சேனா பேசினார்.

**கடல் உணவு பொருள் ஏற்றுமதி 9 லட்சம் டன்னாக உயர்வு**



இறால் மீன் ஏற்றுமதி அதிகரித்ததால் இந்தியாவின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி 2012,13ம் நிதியாண்டில் 9.28 லட்சம் டன்னாக அதிகரித்தது. இது அதற்கு முந்தைய ஆண்டை விட 7.68 சதவீதம் அதிகமாகும். இதுகுறித்து கடல் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி அமைப்பு தலைவர் நீனா நாயர் கூறியதாவது: ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார மந்தநிலை நீடிப்பது,

ரூபாய் மதிப்பு குறைந்தது போன்ற பல்வேறு தடைகள் இருந்தாலும் கடல் உணவு ஏற்றுமதியில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதியாகும் மொத்த கடல் பொருட்களில் நான்கில் ஒரு பங்கு உறைய வைக்கப்பட்ட இறாலாகும். மதிப்பின் அடிப்படையில் பார்த்தால் இறால் ஏற்றுமதி மூலம் 51.35 சதவீதம் வருவாய் கிடைத்துள்ளது. 2012,13ம் ஆண்டில் இறால் ஏற்றுமதி 21 சதவீதம் அதிகரித்துள்ளது.

**நிலத்தடி நீர் குறைவதால் அவதி புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம்**

காட்டுமன்னார்கோவில், :

காட்டுமன்னார்கோவில் பகுதியில் விவசாய நிலங்கள் அதிக அளவு காணப்படுகிறது. கடந்த ஆண்டு பருவமழை சரியாக பெய்யாததால் விவசாயிகள் பல்வேறு சிரமத்துக்கு ஆளாகினர். ஆழ்குழாய் கிணறு வைத்திருப்பவர்கள் மட்டுமே பாசனம் செய்து விவசாயம் செய்தனர். ஆழ்குழாய் இல்லாத விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டது. இதில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்ததால் ஆழ் குழாய் கிணறு

வைத்திருப்பவர்களுக்கும் போதிய தண்ணீர் கிடைக்காமல் விவசாயம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் சில விவசாயிகள் மீண்டும் பல லட்சம் செலவு செய்து புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியில் ஈடுப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே சரிவர விளைச்சல் வராத நிலையில் விவசாயத்தையே கைவிடும் நிலையில் விவசாயிகள் இருந்து வருகின்றனர். நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் தற்போது விவசாயமே செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே மாவட்ட நிர்வாகம் இந்த பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் இல்லாமல் பயனற்று போன ஆழ்குழாய் கிணறுகளுக்கு பதிலாக புதிதாக அமைக்கும் ஆழ்குழாய் கிணறுகளுக்கு விவசாயிகளுக்கு மானியத்துடன் கடனுதவி அளிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

26.06.2013 A.M

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு எள் வரத்து அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி,

கள்ளக்குறிச்சி ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு எள் வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

எள் வரத்து அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு திருவண்ணாமலை மாவட்டம் தொன்டியனூர், சதாகுப்பம், பெருங்குளத்துர், தாளிப்பாடி, தண்டராம்பட்டு மற்றும் கள்ளக்குறிச்சி பகுதியில் உள்ள விருகாவூர், நீலமங்கலம், புக்கிரவாரி, வாணவரெட்டி, விளம்பார், மலைக்கோட் டாலம் மற்றும் தியாகதுருகம் பகுதிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் எள் மூட்டைகளை எடுத்து வரு கின்றனர். தற்போது கடந்த சில வாரங்களாக இங்குள்ள கமிட்டிக்கு எள் வரத்து அதிகரிக்க தொடங்கியுள் ளது.

விவசாயிகள் மகிழ்ச்சி

நேற்று 200 மூட்டை எள் வந்தது. அதிகபட்சமாக ரூ.6,469க்கும், குறைந்த பட்சமாக ரூ.5,939க்கும் விலை போனது. கடந்த வாரம் எள் மூட்டை அதிகபட்சமாக ரூ.5,690க்கும், குறைந்த பட்சமாக ரூ.5,256க்கும் விலை போனது. எனவே கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் ரூ.ஆயிரம் விலை அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு ரூ.4,800 தான் விலை போனது. இந்த ஆண்டு ரூ.6,469 விலை அதிகரித் துள் ளதால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர்.

## தென் மேற்கு பருவ மழை தீவிரம் ஊட்டி அணைகளில் நீர்மட்டம் உயர்வு

ஊட்டி, நீலகிரி மாவட்டத்தில் தற்போது தென் மேற்கு பருவமழை பெய்து வருவதால் ஊட்டி அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

தென் மேற்கு பருவமழை

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தென் மேற்கு பருவமழை பெய்யும். அக்டோபர், நவம்பர் மாதங் களில் வட கிழக்கு பருவ மழை

பெய்யும். இந்த பருவ மழை யினால் மக்களுக்கு தேவை யான குடிநீர் கிடைக்கிறது. மேலும், விவசாயிகள் இதன் மூலம் பயன் அடைந்து வருகி றார்கள். இந்த நிலையில், நேற்று முன்தினம் அவலாஞ்சி, எம ரால்டு, பார்சன்ஸ் வேலி வனப்பகுதிகளில் பெய்த பலத்த மழையின் காரணமாக ஊட்டி நகருக்கு குடிநீர் வழங் கும் முக்கிய அணைகளுள் ஒன்றான பார்சன்ஸ்வேலி அணையில் நேற்று ஒரே நாளில் 17 அடிக்கு தண்ணீர் வந்தது. மேலும், ஊட்டி நக ருக்கு குடி நீர் வழங்கும் மார்லி மந்து, டைகர் ல், கோரி சோலா உள்பட பல் வேறு சிறிய அணைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.

<u>அணைகளின் நீர் மட்டம்</u>

ஊட்டி நகருக்கு குடிநீர் வழங்கும் அணையில் தற் போது உள்ள நீர் மட்டம் அளவு விவரம் வருமாறு:-

பார்சன்ஸ்வேலி-33.8 அடி

மார்லிமந்து -3.5 அடி

டைகர் ல் -2 அடி

கோரிசோலா- 5 அடி

தொட்டபெட்டா (அப்பர்)- 8 அடி

தொட்டபெட்டா (லோயர்) - 9 அடி

கோடப்ப மந்து (லோயர்)- 3 அடி

கோரிசோலா- 5 அடி

கிளன் ராக் 1.5 அடி

ஓல்டு ஊட்டி 1.5 அடி

**புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில் ரூ.3Ñ கோடி மானியத்துடன் கடன் வழங்க இலக்கு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தகவல்**

திருப்பூர்,

திருப்பூர் மாவட்டத்தில் புதிய தொழில் முனை வோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு ரூ.3 Ñ கோடி மானியத்துடன் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள் ளது என்று கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தெரி வித்துள்ளார்.

<u>கருத்தரங்கு</u>

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் (நீட்ஸ்) குறித்த மாவட்ட அளவிலான தகவல் பரப்பு மற்றும் விழிப்புணர்வு கருத் தரங்கம் நேற்று காலை திருப் பூர் ஊராட்சி ஒன்றிய குழு கூட்ட அரங்கில் நடந்தது. மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ரங்கசாமி வரவேற்றார். மாவட்ட வரு வாய் அதிகாரி கஜலட்சுமி முன்னிலை வகித்தார்.

கருத்தரங்கில் கலெக்டர் ஜி.கோவிந்தராஜ், ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 9 பேருக்கு புதிய தொழில் தொடங்க ரூ.4 கோடியே 92 லட்சத்து 33 ஆயிரம் மதிப்பி லான கடன் ஒப்பளிப்பு சான்று வழங்கினார். கருத் தரங்கில் கலெக்டர் கோவிந்த ராஜ் பேசியதாவது:-

முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கு ரூ.5 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை உற்பத்தி மற்றும் சேவை தொழில் திட்டங்களுக்கு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மூலம் கடனுதவி பெற்றுக் கொடுக்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும். 3 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

<u>ரூ.3Ñ கோடி மானியம்</u>

பட்டம் மற்றும் பட்டயம், ஐ.டி.ஐ. முடித்தவர்கள் குறைந்தபட்சம் 21 வயது முடிந்தவர்களாக இருக்க வேண்டும். பொது பிரிவினர் 35 வயதுக்குள்ளும், இதர சிறப்பு பிரிவினர் 45 வயதுக் குள்ளும் இருக்க வேண்டும். பயனாளிகளின் பங்குத் தொகையாக பொதுப்பிரி வினர் திட்ட மதிப்பீட்டில் 10 சதவீதமும், இதர சிறப்பு வகுப்பினர் திட்ட மதிப்பீட் டில் 5 சதவீதமும் வங்கிக்கு செலுத்த வேண்டும். பெண் களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் இந்த திட் டத்தின் கீழ் 34 பயனாளி களுக்கு ரூ.3 கோடியே 40 லட்சம் மானியத்தில் கடனு தவி வழங்க இலக்கு நிர்ண யிக்கப்பட்டு உள்ளது. தெளி வான திட்ட மதிப்பீட்டுடன் விண்ணப்பிக்க வேண்டும். இலவசமாக தொழிற்பயிற்சி யும் அளிக்கப்படுகிறது. புதிய தொழில் முனைவோர் உரு வாக வாழ்த்துக்களை தெரி வித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் பேசினார்.

<u>சிறப்புரை</u>

கருத்தரங்கில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராஜகோபால், நபார்டு உதவி பொது மேலாளர் ஸ்ரீராம், பாரத ஸ்டேட் வங்கி முதன்மை மேலாளர் மாணிக் கம், கோவை குறு, சிறு, நடுத் தர தொழில்கள் வளர்ச்சி மைய உதவி இயக்குனர் விஜய குமார், தமிழ்நாடு

தொழில் முதலீட்டு கழக கிளை மேலா ளர் கந்தசாமி, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சரவண பவா, தாட்கோ மாவட்ட மேலாளர் ராஜேஸ் வரி, திருப்பூர் தொழில் கூட்டமைப்பு தலைவர் அகில் மணி, திருப்பூர் ஏற்றுமதி பின்னலாடை தொழில் வளாக தலைவர் மந்த்ராச்சலம் ஆகியோர் விளக்க உரை யாற்றினார்கள். முடிவில் மாவட்ட தொழில் மைய உதவி பொறி யாளர் சண்முக சிவா நன்றி கூறினார்.

கருத்தரங்கில் திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 300-க்கும் மேற்பட்ட இளைஞர், இளம் பெண்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## புதிய தொழில் முனைவோருக்கு ரூ.1 கோடி வரை மானியக் கடன் உதவி: கலெக்டர் மகரபூஷணம் தகவல்

சேலம்

புதிய தலைமுறை தொழில் முனைவோருக்கு ரூ.1 கோடிவரை மானியக்கடன் உதவி வழங்கப்படும் என்று கலெக்டர் மகரபூஷணம் தெரிவித்தார்.

<u>கருத்தரங்கம்</u>

தமிழக அரசின் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மானியத்திட்டங்கள் மற்றும் நீட்ஸ் திட்டம் குறித்த மாவட்ட அளவிலான தொழில் முனைவோர் ஊக்குவிப்பு கருத்தரங்கம் நேற்று சேலத்தில் நடந்தது.

நிகழ்ச்சியில் கலெக்டர் மகரபூஷணம் கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசியதாவது:–.

<u>ரூ.1 கோடிவரை கடன் உதவி</u>

தமிழக அரசின் சார்பில் தொழில் முனைவோர் மற்றும் தொழிற்சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம், படித்த வேலையற்ற இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோர் ஆவதற்காக, இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்பயிற்சி முடித்தவராக இருக்க வேண்டும். அவர்களது வயது வரம்பு 21 வயது முதல் 45 வயது வரை இருக்க வேண்டும்.

மேலும், இவர்கள் முதல் தலைமுறை தொழில்முனைவோராக இருத்தல் வேண்டும். மாவட்ட தொழில் மையத்தின் மூலம் வங்கிகளின் முழு ஒத்துழைப்போடு இவர்களுக்கு ரூ.1 கோடி வரை வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.

<u>வங்கி கடன்</u>

இளைஞர்களை ஊக்குவித்து, அவர்களை சிறந்த தொழில் அதிபர்களாக ஆக்குவதற்கு மாவட்ட தொழில் மையமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மற்றும் அனைத்து வணிக வங்கிகளும் கடனுதவி வழங்குவதற்கு தயாராக உள்ளது. எனவே, இளைஞர்களாகிய நீங்கள் இத்திட்டங்களை நன்கு பயன்பெற்று தொழில் முனைவோராக உருவாகுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

கருத்தரங்கில் மாவட்ட தொழில் மைய துணை மேலாளர் கோவிந்தராஜன், இந்தியன் வங்கியின் துணை பொது மேலாளர் செழியன், சேலம் மாவட்ட சிறு மற்றும் குறுந்தொழில்கள் சங்கத் தலைவர் மாரியப்பன், சோனா கல்லூரி செயலாளர் தீரஜ்லால், தியாகராஜா பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் கார்த்திகேயன் ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

**பிலிக்கல்பாளையம் ஏல மார்க்கெட்டில் வெல்லம் விலை சரிவு**

பரமத்தி வேலூர்,

பிலிக்கல்பாளையம் ஏல மார்க்கெட்டில் வெல்லத்தின் விலை சரிவு அடைந்து உள்ளது.

<u>கரும்பு பயிரீடு</u>

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா கபிலர்மலை, பரமத்தி வேலூர், குப்பிச்சிபாளையம், எல்லைமேடு, சோழ சிராமணி, ஜமீன் இளம்பிள்ளை, ஜேடர் பாளையம், பிலிக்கல்பாளையம், அண்ணா நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஏராள மான ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இந்த பகுதிகளில் விளையும் கரும்புகள் வெட்டப்பட்டு சோழசிராமணி, ஜேடர்பாளை யம், பிலிக்கல்பாளையம், அய்யம்பாளையம், கபிலர்மலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வெல்லம் தயாரிக்கும் ஆலைகளுக்கு அனுப் பப்பட்டு, அங்கு கரும்பு சாறு பிழியப்பட்டு பின்னர் கொப்பறைகளில் காய்ச்சப்பட்டு அச்சு மற்றும் உருண்டை (குண்டு) வெல்லங்களாக தயாரிக்கப்படுகிறது.

<u>உற்பத்தி குறைந்தது</u>

இவ்வாறு வெல்ல ஆலைகளில் தயாரிக்கப்படும் வெல்லம் அனைத்தும் 30 கிலோ கொண்ட சிப்பங்களாக மூட்டைகளில் தனித்தனியே கட்டப்பட்டு பிலிக்கல் பாளையத்தில் உள்ள வெல்ல ஏல மார்க்கெட் டுக்கு அனுப்பப்படுகிறது. தற்போது கரும்பு வரத்து குறைந்து உள்ளதால் குறைந்த அளவிலேயே வெல்லம் தயார் செய்யப்பட்டு வருகிறது. முன்பு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் முதல் ரூ.3 ஆயிரத்து 500 வரை விற்பனை

செய்யப்பட்டது. ஆனால் தற்போது கரும்பு டன் ஒன்று ரூ.2 ஆயிரம் முதல் ரூ.2 ஆயிரத்து 500 வரையே விற்பனை செய்யப்படுகிறது.

விலை சரிவு

பிலிக்கல்பாளையத்தில் சென்ற வாரம் நடைபெற்ற ஏலத்தில் உருண்டை (குண்டு) வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,400–த்திற்கும், அச்சு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,500–க்கும் ஏலம் போனது. இந்தவாரம் நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.900–த் திற்கும், அச்சு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,100–க்கும் ஏலம் போனது. தற்போது சீசன் இல்லாததால் வெல்லத்தின் விலை சரிவு அடைந்து உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## மாங்கூழ் உற்பத்தியில் இந்தியாவில் முதலிடத்தை பிடித்தது கிருஷ்ணகிரி மாவட்டம் தொழிற்சாலைகளில் தேக்கம் அடையாமல் ஏற்றுமதியானதால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி,

மாம்பழ விளைச்சல் சற்று குறைவாக இருந்த போதிலும் இந்த ஆண்டு மாங்கூழ் உற்பத்தியில் இந்தியாவில் முதலிடத்தை கிருஷ்ணகிரி மாவட்டம் தட்டி சென்றது. உலக மார்க்கெட் தவிர உள்ளூர் மார்க்கெட்டிலும் மாங்கூழுக்கு நல்ல வரவேற்பு கிடைத்ததால் தொழிற்சாலைகளில் மாங்கூழ் இந்த ஆண்டு தேக்கம் அடையவில்லை.

மாங்கூழ் உற்பத்தி

தமிழகத்தில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் எக்டேருக்கும் அதிகமாக சுவை மிகுந்த மாங்கனிகள் விளைகின்றன. இந்த மாவட்டத்தில் மல்கோவா, செந்தூரா, காதர்(அல்போன்சா), பீத்தர், பங்கனப்பள்ளி, நீலம், ருமானி, இமாம்பசந்த், காளப்பாடு, குண்டு, சர்க்கரைக்குட்டி உள்பட பல்வேறு ரக மாங்கனிகள் விளைகின்றன.

இங்கு விளையும் மாங்கனிகள் வெளிமாநிலங்களுக்கு மட்டுமின்றி, ஜப்பான், அமெரிக்கா மற்றும் பல்வேறு வளைகுடா நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. இதுதவிர இங்கு விளையும் மாங்கனிகளை கூழாக்கி ஏற்றுமதி செய்யும் பணியில் 70–க்கும் மேற்பட்ட மாங்கூழ் தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மாங்கூழ் 62 உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வளைகுடா நாடுகள்

இங்கு உற்பத்தியாகும் மாங்கூழில் 75 சதவீதம் வளைகுடா நாடுகளான சவுதிஅரேபியா, குவைத், ஏமன் போன்ற நாடுகளுக்கும், 15 சதவீதம் ஐரோப்பிய நாடுகளுக்கும், 10

சதவீதம் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உலக மார்க்கெட்டில் கிருஷ்ணகிரியில் தயாராகும் மாங்கூழுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தை பொறுத்தவரை 75 சதவீதம் மாங்கூழ் தோத்தாபுரி வகை மாம்பழத்தில் இருந்தும், 25 சதவீதம் அல்போன்சா வகை மாம்பழத்தில் இருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறது.

மாம்பழ விளைச்சல் குறைவு

இந்த ஆண்டு மாமரங்கள் நன்றாக பூத்து குலுங்கிய போதும் கடும் வெயிலால் பூக்களும், அதைத் தொடர்ந்து பிஞ்சுகளும் உதிர்ந்தது. மேலும் மாம்பழத்திற்கு ஏற்ற தருணத்தில் மழை பெய்யாத நிலையில் மாம்பழ விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. மழை குறைவால் மாங்காய்களின் அளவும், சதைப்பற்றும் குறைவாகவே இருந்ததால், இந்த ஆண்டு மாங்கூழ் உற்பத்தியில் சிறிது பாதிப்பு ஏற்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரும்பாலும் 3.5 கிலோ எடை கொண்ட கேன்களில் தான் மாங்கூழ் நிரப்பி ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வளைகுடா நாடுகளில் பெரும்பாலான பகுதிகளில் கேன்களில் வரும் மாங்கூழுக்கு தடை விதித்தனர். இதனால் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு கேன்களில் நிரப்பப்படும் மாங்கூழின் அளவு கடுமையாக குறைந்துள்ளது.

1¼ லட்சம் டன் உற்பத்தி

கடந்த ஆண்டு கேன்களில் நிரப்பப்பட்ட மாங்கூழ் 4 ஆயிரம் கண்டெய்னர்கள் அதாவது சுமார் 75 ஆயிரம் டன் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு கேன் உற்பத்தி 30 ஆயிரம் டன்னாக குறைந்தது. மாறாக ‘அசெப்டிக் பேரல்’ எனப்படும் பேரல்களில் நிரப்பப்படும் மாங்கூழ் உற்பத்தி புதிய சாதனையை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டு வரை 3 ஆயிரம் கண்டெய்னர்கள் அளவில் இருந்த பேரல் உற்பத்தி இந்த ஆண்டு 5 ஆயிரம் கண்டெய்னரை தாண்டியுள்ளது. பேரல்களில் மட்டும் இந்த ஆண்டு சுமார் 85 ஆயிரம் முதல் 90 ஆயிரம் டன் வரை மாங்கூழ் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு 1¼ லட்சம் டன் மாங்கூழ் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

1 வாரம் மட்டும்...

கிருஷ்ணகிரி மாவட்டத்தை பொறுத்தவரை ஆண்டுதோறும் 1½ லட்சம் டன் மாங்கூழ் உற்பத்தி செய்யப்படும். ஆனால் இந்த ஆண்டு மாம்பழ விளைச்சல் பாதிப்பால் மாங்கூழ்

உற்பத்தியும் சற்று குறைந்துள்ளது. இன்னும் 1 வாரம் மட்டுமே இந்த மாவட்டத்தில் மாங்கூழ் உற்பத்தி நடைபெறும் வாய்ப்புள்ளது. காரணம் மாம்பழ வரத்து மிகவும் குறைந்துவிட்டது. தற்போது மாங்கூழுக்கு தேவையான மாம்பழங்கள் ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் இருந்து வரவழைக்கப்படுகிறது.

இந்தியாவில் ஆந்திரா, குஜராத், மராட்டியம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மாங்கூழ் உற்பத்தி நடைபெறுகிறது. இந்த ஆண்டு அனைத்து மாநிலங்களையும் விட தமிழகத்தில் தான் குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தான் மாங்கூழ் உற்பத்தி அதிகம் நடைபெற்றுள்ளது. மாங்கூழ் உற்பத்தியில் இந்தியாவில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளது.

ஏற்றுமதியில் லாபம்

கடந்த ஆண்டு 6 கேன்கள் கொண்ட 1 காட்டன் மாங்கூழின் விலை உலக மார்க்கெட்டில் 12 டாலராக இருந்தது. அப்போது டாலரின் மதிப்பு ரூ.44 ஆக இருந்தது. இந்த ஆண்டு 1 காட்டன் மாங்கூழ் 12 முதல் 13 டாலருக்கு விற்பனையானது. விலையில் மாற்றம் அதிகம் இல்லை என்ற போதிலும், டாலரின் மதிப்பு ரூ.59 ஆக உயர்ந்துள்ளதால், ஏற்றுமதியாளர்களுக்கு நல்ல லாபம் கிடைத்துள்ளது. டாலரின் மதிப்பு உயர்ந்ததால் 1 காட்டனுக்கு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ரூ.200 வரை அதிக லாபம் கிடைத்துள்ளது.

தேக்கம் இல்லை

மாங்கூழ் உற்பத்தி குறித்து பிரபல மாங்கூழ் உற்பத்தியாளர் மதியழகனிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியான மாங்கூழுக்கு உலக மார்க்கெட்டில் மட்டுமல்ல, இந்த ஆண்டு உள்ளூர் மார்க்கெட்டிலும் நல்ல வரவேற்பு கிடைத்தது. இதனால் இந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மாங்கூழ் தேக்கம் இல்லாமல் அனுப்பப்பட்டுள்ளது. 60 சதவீதம் வெளிநாடுகளுக்கும், 40 சதவீதம் உள்ளூர் மார்க்கெட்டிற்கும் விற்பனையாகி உள்ளது. டாலரின் மதிப்பு கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு உயர்ந்துள்ளதால், ஏற்றுமதியாளர்களுக்கு லாபம் கிடைத்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்பட்ட மாங்கூழ் தொழிற்சாலைகளில் தேக்கம் அடைந்ததால், உற்பத்தியாளர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளானார்கள். அந்த நிலை மாறியுள்ளது அனைவருக்கும் மகிழ்ச்சியை தந்துள்ளது. இவ்வாறு மதியழகன் தெரிவித்தார்.

**கிருஷ்ணகிரி ஆவின் நிறுவனத்தில் பால் கொள்முதலை அதிகரிக்க தீவிர நடவடிக்கை உற்பத்தியாளர்கள் சங்க தலைவர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் தலைவர் தகவல்**

ஊத்தங்கரை,

கிருஷ்ணகிரி ஆவின் நிறுவனத்தில் பால் கொள்முதலை அதிகரிக்க அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக எடுக்கப்படும் என ஊத்தங்கரையில் நடந்த பால் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆவின் தலைவர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

கலந்தாய்வுக் கூட்டம்

தர்மபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்(ஆவின்) சார்பில் ஊத்தங்கரை மற்றும் மத்தூர் பகுதி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் ஊத்தங்கரையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆவின் தலைவர் டி.கே.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். ஊத்தங்கரை எம்.எல்.ஏ. மனோரஞ்சிதம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் ஆவின் துணைத் தலைவர் தென்னரசு, பொதுமேலாளர் கெம்பையன், துணைப் பதிவாளர்(பால்வளம்) முனிராஜ், மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் நாகராஜன், ஊத்தங்கரை ஒன்றியக்குழுத் தலைவர் கிருஷ்ணன், துணைத் தலைவர் சுப்பிரமணி, ஆவின் இயக்குனர்கள் அம்சவேணி ரமேஷ்குமார், மாதையன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கொள்முதலை அதிகரிக்க நடவடிக்கை

கூட்டத்தில் பேசிய ஆவின் தலைவர் டி.கே.ராஜேந்திரன், தற்போது ஆவின் நிறுவனத்தில் நாளொன்றுக்கு 1½ லட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் 80 ஆயிரம் லிட்டர் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பால் கொள்முதலை அதிகரிக்க அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான அனைத்து முயற்சிகளும் தீவிரமாக எடுக்கப்படும். இவ்வாறு ராஜேந்திரன் பேசினார்.

கூட்டத்தில் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு மானியம், உபகரணங்கள், கணினி வழங்குதல் மற்றும் வாராவாரம் பணம் பட்டுவாடா செய்தல், புதிய கட்டிட வசதிகள் செய்து கொடுத்தல் குறித்து விவாதிக்கப்பட்டது. முன்னதாக கெங்கபிராம்பட்டி பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் நாராயணசாமி வரவேற்றார். முடிவில் செயலாளர் சண்முகம் நன்றி கூறினார்.